ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீலோகாசார்ய குரவே நம:
ஸ்ரீமத் வரவரமுநயே நம:



ஸ்ரீபிள்ளைலோகாசார்யர் அருளிய

ஸ்ரீவசநபூஷணம் – ஆசார்யஶிஷ்ய லக்ஷணம்

மணிப்ரவாளநடையிலுள்ள மணவாளமாமுனிகளின் வ்யாக்யானத்தின் எளிய தமிழாக்கம்

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீலோகாசார்ய குரவே நம:
ஸ்ரீமத் வரவரமுநயே நம:



ஸ்ரீவசநபூஷணம் – ஆசார்யஶிஷ்ய லக்ஷணம்

மணிப்ரவாளநடையிலுள்ள மணவாளமாமுனிகளின் வ்யாக்யானத்தை எளிய தமிழில் விவரித்து எழுதியவர்
ஸ்ரீவில்லிபுத்தூர் வித்வான் ஸ்ரீ.உ.வே.கண்ணன்ஸ்வாமி

கோயில் கந்தாடை வாதூலதேசிக அண்ணன் மஹாசார்யர் ஸ்ரீரங்காசார்யரின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு இந்நூல் வெளியிடப்படுகிறது.

வெளியிடுபவர்:
ஸ்ரீ.உ.வே.சிறுபுலியூர் அண்ணன்
சுத்தஸத்வாசார்யார்
137, வடக்கு உத்தரவீதி,
ஸ்ரீரங்கம் 620 006.

FIRST EDITION JUNE 2010

PRICE- RS.25/

COPIES CAN BE HAD FROM

1. **SRI.U.Ve.SIRUPULIYUR ANNAN SUDDHA SATVACHARYAR**
   137. NORTH UTTARA STREET, SRIRANGAM 620006.
   PH- 0431 2432746, MOB-93447 54320

2. **SRI.U.Ve.VIDWAN. R.KANNAN SWAMY,**
   B-106. VIGNESH KEERTHANA,
   3. EAST ADAVALAINDAN ST.
   SRIRANGAM 620 006.
   PH- 0431 2430631 MOB-94423 58248

PRINTED AT
R.N.R.PRINTERS
THANDAVARAYAN ST.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீலோகாசார்ய குரவே நம:
ஸ்ரீமத் வரவரமுநயே நம:



முன்னுரை

ஶ்ரிய:பதியாகிய ஸ்ரீமந் நாராயணனையே பரதேவதையாகக் கொண்ட விசிஷ்டாத்வைத ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் பகவானது அநுக்ரஹத்தைப் பெறுவதற்குரிய வழிகள் ஐந்தாகக் கூறப்பட்டுள்ளன. அவை கர்மயோகம், ஞானயோகம், பக்தி யோகம், ப்ரபத்தி, ஆசார்யாபிமானம் என்று. இவற்றில் ப்ரதானமானதும் சுலபமானதும் ஆசார்யாபிமானமேயாகும். வேதம், இதிஹாஸ, புராணங்கள் எல்லாமே இவ்வாத்மா கடைத்தேறுவதற்குரிய ப்ரதான காரணமாக ஆசார்யா பிமானத்தையே வலியுறுத்திக் கூறியுள்ளன. ஆசார்யனன்னியில் மோக்ஷம் பெறமுடியாது என்பதனை பொய்யிலாத மணவாளமாமுனிகள் உபதேசரத்திநமாலையில் தெளிவுபடத் தெரிவித்துள்ளார்.

''தன்குருவின் தாளிணைகள் தன்னில் அன்பொன்றில்லாதார்–
அன்புதன்பால் செய்தாலும் அம்புயைகோன்–இன்பமிகு
விண்ணாடு தானளிக்கவேண்டியிரான் ஆதலால் –
நண்ணார் அவர்கள் திருநாடு''

வழிப்பறி கொலை கொள்ளை முதலிய பெரும் பாவச்செயல்களைச் செய்த ''க்ஷத்ரபந்து'' என்பவனும் ஆசார்யாநு க்ரஹத்தால் மோக்ஷம் பெற்றான். ஆசார்யன் அன்னியில் பகவான் பக்கல் செல்வதை ''கிடந்தானை கண்டேறுமா போலே'' என்று நம்பூர்வர்கள் அருளியுள்ளார்கள். ரத்நத்தின் விலை உயர உயர ரத்நத்தைக் காட்டிக் கொடுத்தவன் பக்கலிலே மதிப்பு உயருமாப்போலே என்று மொழிந்துள் ளனர். பிள்ளைஉலகாரியன் தமது ஸ்ரீவசநபூஷணத்தில் மூன்றாவதாக ''ஸதாசார்யாநுவர்த்தநம்'' என்கிற பெயரில் 58 சூர்ணிகைகள் பரக்க அருளியுள்ளார். அதில் ஆசார்ய சிஷ்ய லக்ஷணங்கள் கூறப்பட்டுள்ளன. அதற்கு மாமுனிகள் விரிவான உரை எழுதியுள்ளதும் அனைவரும் அறிந்ததே. அது மணிப்ரவாள நடையில் அமைந்துள்ளது. மேலும்

‘‘ஆசார்யன் சிஷ்யன் வஸ்துவைக் கொள்ளக்கடவனல்லன்; சிஷ்யன் தன் வஸ்துவைக் கொடுக்கக்கடவனல்லன்; கொள்ளில் மிடியனும், கொடுக்கில் கள்ளனும்’’ போன்ற சூர்ணிகைகள் மேலெழுந்தவாரியாகப் பார்க்கும் போது மயக்கம் தரத்தக்கனவாக உள்ளன. இக்காலத்தில் மணிப்ரவாளநடை அனைவரும் எளிதில் அறிந்து கொள்ள இயலாத நிலையில் உள்ளது. அதனை அனைவரும் புரிந்துகொள்ளும் வகையில் எளிய தமிழில் எழுதி வெளியிடவேண்டுமென்று அடியேனது ஆசார்யனது நியமனத்திற்கிணங்க குலிங்கசகுனம் போன்று இவ்வரிய ஸாஹஸச் செயலில் இறங்கியுள்ளேன். எளியேனது சிற்றறிவுக்கு ஏற்றவகையில் எழுதியுள்ளளேன். இவற்றில் ஏதும் கருத்துச் சிதைவோ மற்ற குற்றங்களோ இருக்குமாகில் திருத்திப் பணிகொள்ள வேண்டுகிறேன். பகவதனுக்ரஹமும் ஆசார்யாநுக்ரஹமும் நல்லபடியாக தலைக்கட்டித்தருமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இந்நூல் வெளியிடுவதற்குப் பூரண ஒத்துழைப்பு நல்கிய அஸ்மதாசார்யரான ஸ்ரீ.உ.வே.சுத்தஸத்வாசார்யன் ஸ்வாமிக்கு அடியேனது க்ருதஜ்ஞதாபுரஸ்ஸரமான ப்ரணாமங்கள். இதனைச் செப்பனிட்டுக் கொடுத்த கோயில் ஆத்தான் ஸ்ரீ.உ.வே. விஜயராகவான் ஸ்வாமிக்கும், புத்தூர் பாலாஜி என்கிற ஸ்ரீ.உ.வே. ரகுராமனுக்கும் அடியேனது நன்றி உரித்தாகுக. அவ்வப்போது அயராது உதவிய ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்ரீமான் திருமலைக்கும், அழகுற அச்சிட்டுக்கொடுத்த ஸ்ரீ.உ.வே.ஆராவமுதன் ஸ்வாமிக்கும்,சென்னை RNR அச்சகத்தாருக்கும் எளியேனது நன்றி உரித்தாகுக. இந்நூலை எல்லாரும் வாங்கிப் படித்து பகவத் க்ருபைக்கும் ஆசார்யாநுக்ரஹத்திற்கும் பாத்திரமாக வேண்டுகிறேன்.

ஸ்ரீரங்கம் — அடியார்க்கடியான்,

31–5–2010 — R.கண்ணன்.

ஸ்ரீமதே ராமானுஜாய நம: ஸ்ரீமத் வரவரமுநயே நம:
ஸ்ரீசுத்தஸத்வாசார்ய மஹாகுரவே நம:

அணிந்துரை

எம்பெருமானார் தொடங்கி நம்பிள்ளை வரையிருந்த ஆசார்யர்கள் ரஹஸ்யார்த்தங்களை ஓராண்வழியாய் உபதேசித்து வந்தார்களேயொழிய ஏடுபடுத்தினார்களில்லை. பிள்ளைலோகாசார்யர் தான் அக்குறைதீர மஹாசார்யர்கள் பக்கல் ஓராண்வழியாகக் கேட்ட ரஹஸ்யார்த்தங்களையெல்லாம் அஷ்டாதசரஹஸ்யம் என்ற பெயரால் வெளியிட்டு மஹோபகாரம் செய்துள்ளார். அப்பதினெட்டினுள்ளும் தலையாயது ஸ்ரீவசநபூஷணமாகும். இதன் பெருமையை ஸ்ரீமணவாளமாமுனிகள் தமது உபதேசரத்தினமாலையில் ஏழுபாசுரங்கள் மூலம் போற்றியுள்ளார்.

''முன்னம் குரவோர் மொழிந்த வசனங்கள்
தன்னை மிகக்கொண்டுகற்றோர் தம்முயிர்க்கு மின்னணியாச்
சேரச்சமைத்தவரே சீர்வசனபூடணமென்
பேர் இக்கலைக்கிட்டார்பின்''

என்று போற்றியுள்ளார். இந்த க்ரந்தத்தை வரியடைவே காலக்ஷேபம் கேட்டுகொண்டுவரும்போது மூன்றாவதாகிய ஸதாசார்யாநுவர்த்தன ப்ரகரணத்தில் ஆசார்யலக்ஷணம் சிஷ்யலக்ஷணம் எல்லாம் விரிவாக விளக்கப்பட்டுள்ளதை அறிந்தேன். இது தற்காலத்திலுள்ள ஆசார்யர்கள் சிஷ்யர்கள் அனைவரும் அவசியம் அறிந்துகொள்ளவேண்டிய விஷயம் என்று அடியேனுக்குத் தோன்றியது. ஸ்ரீமணவாளமாமுனிகள் வ்யாக்யானம் மணிப்ரவாள நடையில் உள்ளதால் இக்காலத்தில் அனைவரும் அறிந்துகொள்ளமுடியாதநிலையில் உள்ளது. அதனை எல்லார்க்கும் புரியக்கூடிய வகையில் எளியதமிழில் எழுதிவெளியிட்டால் தற்காலத்தவர்க்குப் பயனுள்ளதாக இருக்கும் என்று அடியேனுக்குத் தோன்றியது. அடியேனது வேண்டுகோளுக்கிணங்க வடமொழியும் தமிழும் அறிந்தவராகிய ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்ரீ.உ.வே.கண்ணன்ஸ்வாமி தமிழாக்கம் செய்துகொடுத்தார். அவருக்கு அனேகமங்களாசாஸநங்கள். அடியேனது மாதாமஹரும் கீர்த்திமூர்த்தியுமான மஹாசார்யர் அண்ணன்

ஸ்ரீரங்காசார்யர் ஸ்வாமியின் நூற்றாண்டு விழாவின் நினைவாக இந்த க்ரந்தத்தை வெளியிட உத்தேசித்துள்ளோம். அனைத்து ஸ்ரீவைஷ்ணவர்களும் இதனை வாங்குவதுடன் மற்றவர்களையும் வாங்கச்செய்து வாசித்து அதன்படிநடந்து பகவத்க்ருபைக்கும் ஆசார்யாநுக்ரஹத்துக்கும் பாத்திரர்களாக வேண்டுகிறேன். அனைவர்க்கும் அனேக மங்களாசாஸநங்கள்.

ஸ்ரீரங்கம் இங்ஙனம்,

15–6–2010 சுத்தஸத்வாசார்யர்.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீலோகாசார்ய குரவே நம:
ஸ்ரீமத்$_3$ வரவரமுநயே நம:



ஸ்ரீவசநபூ$_4$ஷணம்

ஸத$_3$ாசார்ய அநுவர்த்தந ப்ரகரணம்

1. தான் ஹிதோபதே$_3$ஶம் பண்ணும்போது தன்னையும் ஶிஷ்யனையும் ப$_2$லத்தையும் மாறாடி நினைக்கை க்ரூரநிஷித்$_3$த$_4$ம்.

அஷ்டாக்ஷர மந்திரத்தில் நடுப்பதமாகிய 'நம:' என்கிற ஶப்தம் போலே ஆசார்யனும் ஶிஷ்யனும், கடுமையாக விலக்க வேண்டியதை முதலில் கூறுகிறார். முந்தைய அதிகாரிநிஷ்டாப்ரகரணத்தில் சொன்ன அர்த்தவிஶேஷங்களெல்லாம் குறைவின்றி இருக்கக்கூடிய ஆசார்யன், உஜ்ஜீவிக்க (நல்வாழ்வு) வேண்டுமென்ற ஆவலில் தன்னை வந்து வணங்கி நிற்கக்கூடிய ஶிஷ்யர்களுக்கு உஜ்ஜீவநத்துக்குக் காரணமான மந்திரவடிவில் உள்ள நன்மையை உபதேஶிக்கக்கூடிய காலத்தில், உபதேஶிக்கக்கூடிய தன்னையும், உபதேஶத்திற்குப் பாத்திரனான ஶிஷ்யனையும், உபதேஶிக்கக்கூடிய பலனையும், விபரீதமாக எண்ணுகை, முன்பு விலக்கத்தக்கவைகளாகச் சொன்ன எல்லாவற்றிலும் காட்டில் மிகக்கடுமையாக விலக்கத்தக்கவைகளாகும். மேலும் அவை ஆசார்யனுக்கே நாஶத்தை விளைவிப்பனவைகளுமாகும். மேலும் இவனிடத்தில் உபதேஶம் கேட்கும் ஶிஷ்யனுக்கும் கேடாகையாலே எல்லாவிதத்திலும் கடுமையாக விலக்கத்தக்கவையாகும். இருவருக்கும் ஸ்வருபஸித்தியில்லை என்றும் மேலே சொல்லவிருக்கிறது.

2. தன்னை மாறாடி நினைக்கையாவது – தன்னை ஆசார்யனென்று நினைக்கை; ஶிஷ்யனை மாறாடி நினைக்கையாவது – தனக்கு ஶிஷ்யனென்று நினைக்கை; ப$_2$லத்தை மாறாடி நினைக்கையாவது – 1.த்$_3$ருஷ்ட ப்ரயோஜநத்தையும், 2. ஶிஷ்யனுடைய உஜ்ஜீவநத்தை யும்,3.ப$_4$க$_3$வத்கைங்கர்யத்தையும், 4. ஸஹவாஸத்தையும் ப$_2$லமாக நினைக்கை.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீலோகாசார்ய குரவே நம:
ஸ்ரீமத் வரவரமுநயே நம:

ஸ்ரீபிள்ளைலோகாசார்யர் அருளிய

ஸ்ரீவசநபூஷணம் – ஆசார்யஶிஷ்ய லக்ஷணம்

மணிப்ரவாளநடையிலுள்ள மணவாளமாமுனிகளின் வ்யாக்யானத்தின் எளிய தமிழாக்கம்

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீலோகாசார்ய குரவே நம:
ஸ்ரீமத் வரவரமுநயே நம:



ஸ்ரீவசநபூஷணம் –
ஆசார்யஶிஷ்ய லக்ஷணம்

மணிப்ரவாளநடையிலுள்ள மணவாளமாமுனிகளின் வ்யாக்யானத்தை எளிய தமிழில் விவரித்து எழுதியவர்

ஸ்ரீவில்லிபுத்தூர் வித்வான் ஸ்ரீ.உ.வே.கண்ணன்ஸ்வாமி

கோயில் கந்தாடை வாதூலதேசிக அண்ணன் மஹாசார்யர் ஸ்ரீரங்காசார்யரின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு இந்நூல் வெளியிடப்படுகிறது.

வெளியிடுபவர்:
ஸ்ரீ.உ.வே.சிறுபுலியூர் அண்ணன்
சுத்தஸத்வாசார்யார்
137, வடக்கு உத்தரவீதி,
ஸ்ரீரங்கம் 620 006.

FIRST EDITION JUNE 2010

PRICE- RS.25/

COPIES CAN BE HAD FROM

1. SRI.U.Ve.SIRUPULIYUR ANNAN SUDDHA SATVACHARYAR
   137. NORTH UTTARA STREET, SRIRANGAM 620006.
   PH- 0431 2432746, MOB-93447 54320

2. SRI.U.Ve.VIDWAN. R.KANNAN SWAMY,
   B-106. VIGNESH KEERTHANA,
   3. EAST ADAVALAINDAN ST.
   SRIRANGAM 620 006.
   PH- 0431 2430631 MOB-94423 58248

PRINTED AT
R.N.R.PRINTERS
THANDAVARAYAN ST.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீலோகாசார்ய குரவே நம:
ஸ்ரீமத் வரவரமுநயே நம:

முன்னுரை

ஶ்ரிய:பதியாகிய ஸ்ரீமந் நாராயணனையே பரதேவதையாகக் கொண்ட விசிஷ்டாத்வைத ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் பகவானது அநுக்ரஹத்தைப் பெறுவதற்குரிய வழிகள் ஐந்தாகக் கூறப்பட்டுள்ளன. அவை கர்மயோகம், ஞானயோகம், பக்தி யோகம், ப்ரபத்தி, ஆசார்யாபிமானம் என்று. இவற்றில் ப்ரதானமானதும் சுலபமானதும் ஆசார்யாபிமானமேயாகும். வேதம், இதிஹாஸ, புராணங்கள் எல்லாமே இவ்வாத்மா கடைத்தேறுவதற்குரிய ப்ரதான காரணமாக ஆசார்யா பிமானத்தையே வலியுறுத்திக் கூறியுள்ளன. ஆசார்யனன்னியில் மோக்ஷம் பெறமுடியாது என்பதனை பொய்யிலாத மணவாளமாமுனிகள் உபதேசரத்திநமாலையில் தெளிவுபடத் தெரிவித்துள்ளார்.

''தன்குருவின் தாளிணைகள் தன்னில் அன்பொன்றில்லாதார்–
அன்புதன்பால் செய்தாலும் அம்புயைகோன்–இன்பமிகு
விண்ணாடு தானளிக்கவேண்டியிரான் ஆதலால் –
நண்ணார் அவர்கள் திருநாடு''

வழிப்பறி கொலை கொள்ளை முதலிய பெரும் பாவச்செயல்களைச் செய்த ''க்ஷத்ரபந்து'' என்பவனும் ஆசார்யாநு க்ரஹத்தால் மோக்ஷம் பெற்றான். ஆசார்யன் அன்னியில் பகவான் பக்கல் செல்வதை ''கிடந்தானை கண்டேறுமா போலே'' என்று நம்பூர்வர்கள் அருளியுள்ளார்கள். ரத்நத்தின் விலை உயர உயர ரத்நத்தைக் காட்டிக் கொடுத்தவன் பக்கலிலே மதிப்பு உயருமாப்போலே என்று மொழிந்துள் ளனர். பிள்ளைஉலகாரியன் தமது ஸ்ரீவசநபூஷணத்தில் மூன்றாவதாக ''ஸதாசார்யாநுவர்த்தநம்'' என்கிற பெயரில் 58 சூர்ணிகைகள் பரக்க அருளியுள்ளார். அதில் ஆசார்ய சிஷ்ய லக்ஷணங்கள் கூறப்பட்டுள்ளன. அதற்கு மாமுனிகள் விரிவான உரை எழுதியுள்ளதும் அனைவரும் அறிந்ததே. அது மணிப்ரவாள நடையில் அமைந்துள்ளது. மேலும்

‘‘ஆசார்யன் சிஷ்யன் வஸ்துவைக் கொள்ளக்கடவனல்லன்; சிஷ்யன் தன் வஸ்துவைக் கொடுக்கக்கடவனல்லன்; கொள்ளில் மிடியனும், கொடுக்கில் கள்ளனும்’’ போன்ற சூர்ணிகைகள் மேலெழுந்தவாரியாகப் பார்க்கும் போது மயக்கம் தரத்தக்கனவாக உள்ளன. இக்காலத்தில் மணிப்ரவாளநடை அனைவரும் எளிதில் அறிந்து கொள்ள இயலாத நிலையில் உள்ளது. அதனை அனைவரும் புரிந்துகொள்ளும் வகையில் எளிய தமிழில் எழுதி வெளியிடவேண்டுமென்று அடியேனது ஆசார்யனது நியமனத்திற்கிணங்க குலிங்கசகுனம் போன்று இவ்வரிய ஸாஹஸச் செயலில் இறங்கியுள்ளேன். எளியேனது சிற்றறிவுக்கு ஏற்றவகையில் எழுதியுள்ளளேன். இவற்றில் ஏதும் கருத்துச் சிதைவோ மற்ற குற்றங்களோ இருக்குமாகில் திருத்திப் பணிகொள்ள வேண்டுகிறேன். பகவதனுக்ரஹமும் ஆசார்யாநுக்ரஹமும் நல்லபடியாக தலைக்கட்டித்தருமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இந்நூல் வெளியிடுவதற்குப் பூரண ஒத்துழைப்பு நல்கிய அஸ்மதாசார்யரான ஸ்ரீ.உ.வே.சுத்தஸத்வாசார்யன் ஸ்வாமிக்கு அடியேனது க்ருதஜ்ஞதாபுரஸ்ஸரமான ப்ரணாமங்கள். இதனைச் செப்பனிட்டுக் கொடுத்த கோயில் ஆத்தான் ஸ்ரீ.உ.வே. விஜயராகவான் ஸ்வாமிக்கும், புத்தூர் பாலாஜி என்கிற ஸ்ரீ.உ.வே. ரகுராமனுக்கும் அடியேனது நன்றி உரித்தாகுக. அவ்வப்போது அயராது உதவிய ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்ரீமான் திருமலைக்கும், அழகுற அச்சிட்டுக்கொடுத்த ஸ்ரீ.உ.வே.ஆராவமுதன் ஸ்வாமிக்கும்,சென்னை RNR அச்சகத்தாருக்கும் எளியேனது நன்றி உரித்தாகுக. இந்நூலை எல்லாரும் வாங்கிப் படித்து பகவத் க்ருபைக்கும் ஆசார்யாநுக்ரஹத்திற்கும் பாத்திரமாக வேண்டுகிறேன்.

ஸ்ரீரங்கம் — அடியார்க்கடியான்,
31–5–2010 — R.கண்ணன்.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம: **ஸ்ரீமத் வரவரமுநயே நம:**

ஸ்ரீசுத்தஸத்வாசார்ய மஹாகுரவே நம:

அணிந்துரை

எம்பெருமானுர் தொடங்கி நம்பிள்ளை வரையிருந்த ஆசார்யர்கள் ரஹஸ்யார்த்தங்களை ஓராண்வழியாய் உபதேசித்து வந்தார்களேயொழிய ஏடுபடுத்திஞர்களில்லை. பிள்ளைலோகாசார்யர் தான் அக்குறைதீர மஹாசார்யர்கள் பக்கல் ஓராண்வழியாகக் கேட்ட ரஹஸ்யார்த்தங்களையெல்லாம் அஷ்டாதசரஹஸ்யம் என்ற பெயரால் வெளியிட்டு மஹோபகாரம் செய்துள்ளார். அப்பதினெட்டினுள்ளும் தலையாயது ஸ்ரீவசநபூஷணமாகும். இதன் பெருமையை ஸ்ரீமணவாளமாமுனிகள் தமது உபதேசரத்தினமாலையில் ஏழுபாசுரங்கள் மூலம் போற்றியுள்ளார்.

‘‘முன்னம் குரவோர் மொழிந்த வசனங்கள்
தன்னை மிகக்கொண்டுகற்றோர் தம்முயிர்க்கு மின்னணியாச்
சேரச்சமைத்தவரே சீர்வசனபூடணமென்
பேர் இக்கலைக்கிட்டார்பின்’’

என்று போற்றியுள்ளார். இந்த க்ரந்தத்தை வரியடைவே காலக்ஷேபம் கேட்டுகொண்டுவரும்போது மூன்ருவதாகிய ஸதாசார்யாநுவர்த்தன ப்ரகரணத்தில் ஆசார்யலக்ஷணம் சிஷ்யலக்ஷணம் எல்லாம் விரிவாக விளக்கப்பட்டுள்ளதை அறிந்தேன். இது தற்காலத்திலுள்ள ஆசார்யர்கள் சிஷ்யர்கள் அனைவரும் அவசியம் அறிந்துகொள்ளவேண்டிய விஷயம் என்று அடியேனுக்குத் தோன்றியது. ஸ்ரீமணவாளமாமுனிகள் வ்யாக்யானம் மணிப்ரவாள நடையில் உள்ளதால் இக்காலத்தில் அனைவரும் அறிந்துகொள்ளமுடியாதநிலையில் உள்ளது. அதனை எல்லார்க்கும் புரியக்கூடிய வகையில் எளியதமிழில் எழுதிவெளியிட்டால் தற்காலத்தவர்க்குப் பயனுள்ளதாக இருக்கும் என்று அடியேனுக்குத் தோன்றியது. அடியேனது வேண்டுகோளுக்கிணங்க வடமொழியும் தமிழும் அறிந்தவராகிய ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்ரீ.உ.வே.கண்ணன்ஸ்வாமி தமிழாக்கம் செய்துகொடுத்தார். அவருக்கு அனேகமங்களாசாஸநங்கள். அடியேனது மாதாமஹரும் கீர்த்திமூர்த்தியுமான மஹாசார்யர் அண்ணன்

ஸ்ரீரங்காசார்யர் ஸ்வாமியின் நூற்றுண்டு விழாவின் நினைவாக இந்த க்ரந்தத்தை வெளியிட உத்தேசித்துள்ளோம். அனைத்து ஸ்ரீவைஷ்ணவர்களும் இதனை வாங்குவதுடன் மற்றவர்களையும் வாங்கச்செய்து வாசித்து அதன்படிநடந்து பகவத்க்ருபைக்கும் ஆசார்யாநுக்ரஹத்துக்கும் பாத்திரர்களாக வேண்டுகிறேன். அனைவர்க்கும் அனேக மங்களாசாஸநங்கள்.

ஸ்ரீரங்கம் — இங்ஙனம்,

15–6–2010 — சுத்தஸத்வாசார்யர்.

2. தன்னையும், ஶிஷ்யனையும், பலனையும் மாறுபட்டவாறு நினைப்பது என்றால் என்ன என்பதை இனி விளக்குகிறார். ஶிஷ்யனுக்கு உபதேஶம் பண்ணும் ஸமயத்தில் ஆசார்யன், தன்னுடைய ஆசார்யன்தான் இவனுக்கு உபதேஶம் பண்ணுகிறான் என்றும், தான் அதற்குக் காரணபூதனாக உள்ளோம் என்று எண்ணிக்கொண்டு உபதேஶம் பண்ண வேண்டும். அதாவது தனது ஆசார்யனை மனத்தில் எண்ணிக்கொண்டு உபதேஶிக்கவேண்டும். அவ்வாறின்றி தன்னுடைய ஆசார்யனுக்கு உட்பட்டவனான தன்னை, நான் இச்சீடனுக்கு ஆசார்யன் தான் என்று நினைக்கை குற்றமாகும். உபதேஶம் பெறக்கூடிய ஶிஷ்யனைத் தனது ஆசார்யனது ஶிஷ்யன் என்று எண்ணவேண்டுமேயொழிய தனது ஶிஷ்யன் என்று எண்ணுகை குற்றமாகும். பயனை மாறுபட நினைக்கை யாவது – ஓராசார்யன் ஶிஷ்யனுக்கு உபதேஶம் பண்ணும்போது

*1.*இவன் திருந்தி ''ஆளுமாளார் ஆழியும் சங்கும் சுமப்பார்தாம் – வாளும் வில்லும் கொண்டு பின் செல்வார் மற்றில்லை'' என்று பரிவினாலே பகவானுக்கு மங்களாஶாஸநம் பண்ணவேண்டும் என்பதையே பலனாகக்கொண்டு உபதேஶிக்கவேண்டும்.

2. மேலும் ஶிஷ்யன் தரக்கூடிய பணத்தையோ, தனக்குப் பண்ணும் பணிவிடைகளையோ பலனாக எண்ணி உபதேஶிக்கக் கூடாது. தான் உபதேஶித்ததனால் தான் இவன் ஸம்ஸாரத்தினின்றும் விடுபட்டவனாய் உஜ்ஜீவிக்கப்பெற்றான் என்றும் எண்ணலாகாது. எம்பெருமானுக்கு நந்தவனம் அமைத்தல் முதலிய கைங்கர்யங்களைச் செய்வதிலும் காட்டிலும் ஓராத்மாவை நல்வழிப்படுத்தினால் எம்பெருமான் திருவுள்ளமுகக்கும் என்கிற பகவத்கைங்கர்யத்தையும் பலனாகக் கருதலாகாது. ஆசார்யனாகிய தான் இம்மண்ணுலகில் வாழும் நாளில் தனது தனிமை தீரக் கூடியவகையில் உடன் ஸஹவாஸம் பண்ணுவதையும் பலனாக நினைக்கக்கூடாது.

---

3. நினையாதிருக்க இந்நாலு ப$_2$லமும் ஸித்$_3$தி$_3$க்கிறபடி என்னென்னில் – ஶேஷபூ$_4$தனான ஶிஷ்யன் நினைவாலே த்$_3$ருஷ்ட ப$_2$லம் ஸித்$_3$தி$_4$க்கும்; ஈஶ்வரன் நினைவாலே உஜ்ஜீவநம் ஸித்$_3$தி$_4$க்கும்; ஆசார்யன் நினைவாலே கைங்கர்யம் ஸித்$_3$தி$_4$க்கும்; உபகார ஸ்ம்ருதியாலே ஸஹவாஸம் ஸித்$_3$தி$_4$க்கும்.

---

3. இத்தகைய பலன்களை எண்ணி ஆசார்யன் உபதேஶிக்கலாகாது

என்றால் ஶிஷ்யனுக்கு இந்த நான்கு பலன்களும் எவ்வாறு கிட்டும் என்பதை விவரிக்கிறார். ஶிஷ்யன், தனக்கு ஶேஷத்வமே (அடிமை பூண்டிருத்தலே)ஸ்வரூபம் என்று எண்ணிக்கொண்டிருப்பதால் 'ஆசார்யனுக்குக் கைங்கர்யம் பண்ணாதபோது ஶேஷத்வம் ஸித்திக்காது' என்று தன் ஸ்வரூபம் நிறம் பெறுவதற்காக தன்னாலான கைங்கர்யங்களைச் செய்துகொண்டு போருகையாலே, செல்வம், சுச்ரூஷைகளாகிற இம்மைப் பலன்கள் கிட்டும். எம்பெருமான் எதிர்சூழல் புக்குத் திரிபவனாய் தன்னுடைய விஶேஷகடாக்ஷத்தாலே இந்த ஶிஷ்யனுக்கு எதிலும் த்வேஷம் (பகைமை) பாராட்டாமல் இருக்கும் தன்மையை உண்டாக்கி ஆசார்யனை ஆஶ்ரயிக்கச்செய்கிறான்; அவ்வாசார்ய னது உபதேஶங் களைக் கேட்கும்படி செய்கிறான்; அதன் மூலம் இவனை ஸம்ஸார ஸாகரத்தினின்றும் இக்கரைசேர்ப்பிக்கிறான். இவ்வாறு எம்பெருமானது க்ருபாகார்யமான நினைவாலே ஶிஷ்யனுடைய உஜ்ஜீவனம் ஸித்திக்கிறது. ஆசார்யன் ஶிஷ்யனுக்கு உபதேஶம் பண்ணி அவனை பகவானது மங்களாஶாஸநத்துக்கு உரியவனும்படி திருத்திப் பணிகொள்வ தால், எம்பெருமான் திருவுள்ளம் பெரிதும் உகக்கிறது. எனவே இது பகவத் கைங்கர்யமல்லவா என்று இவ்வாசார்யனது ஆசார்யன் எண்ணுவதாலே உபதேஶிக்கக்கூடிய இவ்வாசார்யனுக்கு பகவத் கைங்கர்யம் ஸித்திக்கிறது. நீண்டகாலமாக நான் எனது (அஹங்காரம் மமகாரம்) என்னும் செருக்குகளாலே நஷ்டப்ராயனாய் கிடந்த தன்னை, நிர்ஹேதுகமாக (எந்தவிதமான காரணமுமின்றி) அங்கீகரித்து அறியாதன வற்றையெல்லாம் அறிவித்து அதன் மூலம் உலகவிஷயங்களில் உள்ள ருசியையும் மாற்றி, பகவானது மங்களாஶாஸநத்துக்கு ஆளாம்படி பண்ணிய மஹாநுபாவரன்றோ இவ்வாசார்யன், என்கிற நன்றியறிதலாலே ஶிஷ்யனனவன் ஆசார்யனை விட்டு கணப்போதும் பிரிய மனமில்லாமல் ஆசார்யனுடன் எப்போதும் கூடிவாழ்வதால் ஸஹவாஸம் தன்னடையே ஸித்திக்கும்.

---

4. ஸாக்ஷாத் பலமும், ஆசார்யத்வமும் ஸித்திக்கிறபடி என்னென்னில், தன்நினைவாலும் ஈஶ்வரன் நினைவாலும் ஸித்திக்கும்.

இவ்வாறு ஆசார்யன் நினையாமலிருக்கச்செய்தே மேலே சொன்ன நான்கு பலன்களும் ஶிஷ்யனுடையவும், ஈஶ்வரனுடையவும்,

தன்னுடைய ஆச்ர்யர்களுடையவும் நினைவாலே ஸித்திக்கும் என்பதனை அருளிச்செய்தார். உபதேஶத்துக்குக் கண்கண்ட பலமாயுள்ளதும், உபதேஶம் பண்ணக்கூடிய தனது ஆசார்யனுக்குப் பரதந்த்ரனை தனக்கு உபதேஶிக்கப்படுகிற ஶிஷ்யனைக் குறித்து உண்டாகும் ஆசார்யத்வம் ஸித்திக்கிறபடியையும் வினவிடை மூலம் விளக்குகிறார். கைகண்டபலனாவது – ஆசார்யனது உபதேஶத்துக்கு இலக்கான இச்சீடன் திருந்தி பகவானது மங்களாஶாஸநத்துக்குத் தக்கவனாதல் ஆகும். இது ஆசார்யன் நினைவாலே ஸித்திக்கையாவது –உபதேஶிக்கக்கூடிய ஆசார்யன் வேறுபட்ட எண்ணம் ஏதுமில்லாமல் உபதேஶிப்பதையே பலனாக உத்தேஶிக்கவே, அந்த ஶிஷ்யன் திருந்தி மங்களாஶாஸநத்துக்கு அதிகாரியாகை. ஆசார்யத்வமாவது – தன்னை ஆசார்ய பரதந்த்ரனாகவே எண்ணியிருக்கிற இவன், தன்னிடத்தில் உபதேஶம் கேட்கிற ஶிஷ்யனுக்கு ஆசார்யனாதல் ஆகும். இது ஈஶ்வரன் நினைவாலே கிட்டுவதாவது – இப்படி இவன் தன்னையும், ஶிஷ்யனையும், பலத்தையும் விப்ரதிபத்தி (மாறுபட்டதாக) எண்ணாமல் உள்ளது உள்ளபடியாக எண்ணி உபதேஶம் பண்ணும் பக்வமுடைய இவ்வாசார்யன், தன்னுடைய ஆசார்யன் உபதேஶம் பண்ணுகிறான் என்று எண்ணுவதாலே இவனுக்கு ஆசார்யத்வம் உண்டாகிறது.

---

5. இப்படியொழிய உபதே₃ஶிக்கில் இருவர்க்கும் ஸ்வரூப ஸித்₃தி₄யில்லை.

---

5. கீழே சொன்னபடி ஆசார்யன் உள்ளபடியே நினைத்து – அதாவது தன் ஆசார்யனே உபதேஶிக்கிறான் என்று நினைத்து உபதேஶித்தாலொழிய ஈஶ்வரன் இவனை ஆசார்யனாக எண்ணமாட்டான். அதனால் உபதேஶம் பண்ணுகிற இவனுக்கு ஆசார்யத்வமாகிற ஸ்வரூபஸித்தி கிட்டாது. அவ்வாறு உள்ளபடியே நினைத்து இவ்வாசார்யன் உபதேஶிக்காதுபோனால் உபதேஶஶக்தியில்லாமையாலே உபதேஶத்துக்கு இலக்கான இச்சீடனுக்கு ஶிஷ்யத்வம் என்கிற ஸ்வரூபஸித்தியில்லை.

---

6. ஆசார்யனுக்கு ஶிஷ்யன் பக்கல் க்ருபையும் ஸ்வாசார்யன் பக்கல் பாரதந்த்ர்யமும் வேணும்.

---

6. ஆசார்யனுக்கு இரண்டு குணங்கள் அவச்யம் வேண்டும் என்கிறார்.

உபதேஶிக்கக்கூடியவனுகிய ஆசார்யனுக்கு நாம் உஜ்ஜீவிக்க (நல்வாழ்வுபெற) வேணும் என்ற ஆவலுடன் வந்து அடிபணிந்து நிற்கக்கூடிய ஶிஷ்யனிடத்தில் ஐயோ என்று மனமிரங்கி அவன் கடைத்தேறுவதற்கான உபதேஶம் முதலானவற்றை பண்ணுவதற் குண்டான க்ருபை வேண்டும். மேலும் ஆசார்யன் தன்னைக் கர்த்தாவாக எண்ணுமல், கருவியாக எண்ணிக்கொண்டு தன்னுடைய ஆசார்யன் விஷயத்தில் பாரதந்த்ர்யம் உடையவனுய் இருத்தல் வேண்டும்.

---

7. க்ருபையாலே ஶிஷ்யன் ஸ்வரூபம் ஸித்$_3$தி$_4$க்கும். பாரதந்த்ர்யத்தாலே தன் ஸ்வரூபம் ஸித்$_3$தி$_4$க்கும்.

---

7. ஶிஷ்யனது ஸ்வரூபம் திருந்துமளவும் மேலும் மேலும் உபதேஶாதிகளைப் பண்ணக்கூடிய ஆசார்யன் க்ருபையினுலே நாளுக்குநாள் ஸ்வரூபம் நிர்மலமாவதால் ஶிஷ்யனது ஸ்வரூபம் ஸித்திக்கும். ஆசார்யன், தான் உபதேஶம் செய்கிறேம் என்கிற எண்ணமின்றி தனது ஆசார்யனது பிரதிநிதியாகத் தன்னை எண்ணிக்கொண்டு, மேற்கொண்டு எல்லாக் காரியங்களிலும் தன் ஆசார்யனுக்கு உட்பட்டவனுய் இருத்தலுக்கும் காரணமான பாரதந்த்ர்யத்தாலே ஆசார்யனை தன்னுடைய ஸ்வரூபம் ஸித்திக்கும்.

---

8. நேரே ஆசார்யன் என்பது ஸம்ஸாரநிவர்த்தகமான பெரியதிருமந்த்ரத்தை உபதே$_3$ஶித்தவனே.

---

8. ஒருவருக்கு ஆசார்யத்வம் குறைவின்றியிருந்தாலும் பெயரளவுக்கு ஆசார்யன் என்று சொல்லுமளவன்றிக்கே ஸாக்ஷாத் ஆசார்யன் என்று சொல்வது ஒரு ஜீவனை ஸம்ஸாரத்தினின்றும் விடுவிக்கக்கூடிய அஷ்டாக்ஷர மந்த்ரத்தை உபதேசித்தவரையே. ‘‘ஐஹலௌகிகம் ஐஶ்வர்யம்’’ என்றும், ‘‘குலம்தரும் செல்வம் தந்திடும்’’ என்றும் எல்லாப் பயன்களையும் தருவதாயிருந்தாலும், மற்றபலன்களில் நோக்கில்லாது மோக்ஷமாகிய பலனையே குறிக்கோளாயிருக்கையாலே ‘‘ஸர்வ வேதாந்தஸாரார்த்த$_2$ ஸம்ஸாரார்ணவதாரக:। க$_3$திரஷ்டாக்ஷரோந்ரு ணும் அபுநர்ப்ப$_4$வ காங்க்ஷிணும்॥’’ ‘‘மந்த்ராணும் பரமோ மந்த்ர: கு$_3$ஹ்யாநாம் கு$_3$ஹ்யமுத்தமம்। பவித்ரஞ்ச பவித்ராணும் மூலமந்த்ர: ஸநாதந:॥’’ என்கிறபடியே எல்லா மந்த்ரங்களைக் காட்டிலும் மேம்பட்ட

பெருமையுடைத்தான திருமந்த்ரத்தை ஶிஷ்யன் ஸம்ஸாரத்தினின்றும் விடுபடவேண்டுமென்ற எண்ணத்துடன் உபதேஶிப்பவனே ஆசார்யனுவான். திருமந்த்ரத்தின் விவரணமே த்வயமும், சரம ஶ்லோகமும். ஆகையால் அவை இத்திருமந்த்ரத்தோடு வேறுபட்டிராமை யால் திருமந்த்ரத்தை உபதேஶிப்பவர் என்று சொன்னபோதே த்வயசரம ஶ்லோகங்களையும் உபதேஶிப்பவர் என்பது தன்னடையே கூறியதாகும். ஆக இம்மூன்று ரஹஸ்யங்களையும் உபதேஶிப்பவரே ஆசார்யனுவார்.

---

9. ஸம்ஸாரவர்த்$_3$த$_4$கங்களுமாய் க்ஷுத்$_3$ரங்களுமான ப$_4$க$_3$வந் மந்த்ரங்களை உபதே$_3$ஶித்தவர்களுக்கு ஆசார்யத்வபூர்த்தி யில்லை.

---

9. பகவானைப் பற்றியதான மந்திரங்களில் ஏதேனும் ஒன்றை உபதேசித்தவர்களுக்கு ஆசார்யனும் தன்மை இல்லையா என்கிற வினுவிற்கு விடையருளிச்செய்கிருர். ஸம்ஸாரத்தினின்றும் மீட்காததோடு மட்டுமின்றி அதனை வளர்ப்பவைகளாயும் க்ஷுத்ரங்களாயுமுள்ள மற்ற பகவந்மந்த்ரங்களை உபதேசிப் பவர்களுக்கு, உபதேசிப்பதால் உண்டான ஆசார்யனுந் தன்மையாகிற தோற்றமேயொழிய ஆசார்யத்வ பூர்த்தியில்லை.

---

10. பகவந் மந்த்ரங்களை க்ஷுத்$_3$ரங்கள் என்றது ப$_2$லத்$_3$வாரா.

---

10. க்ஷுத்ரங்கள் (அற்பங்கள்) என்று சின்னதெய்வங்களின் மந்த்ரங்களைச் சொல்லலாமேயன்றி பகவந்மந்த்ரங்களை இப்படிச் சொல்லலாமோ என்னில், பரதேவதையான பகவத்விஷயத்தைப் பற்றியதாகையாலே வந்த பெருமைகளை உடையதாயிருந்தாலும், அம்மந்த்ரங்களை க்ஷுத்ரங்கள் என்றது மனைவி, மக்கள், கல்வி, செல்வம் முதலிய அற்பபலன்களைக் கொடுக்கிற காரணத்தாலேயாகும்.

---

11. ஸம்ஸாரவர்த்$_3$த$_4$கங்கள் என்கிறதும் அத்தாலே.

---

11. மோக்ஷத்தை அடைவதற்கு இடையூருய், இவ்வுலக வாழ்க்கையை மேலும் வளரச்செய்யும் காரணத்தால் அம்மந்த்ரங்கள் க்ஷுத்ரமந்த்ரங்களாகின்றன.

---

12. இதுதான் ஔபாதிகம்.

12. இதுக்ஷுத்ரமான பலனைத்தருவது இயற்கையானதன்று; காரணத்தையிட்டு வருவதாகும்.

13. சேதநனுடைய ருசியாலே வருகையாலே.

13. பகவந்மந்த்ரங்களாகையாலே அவற்றுக்கு மோக்ஷத்தைத் தரக்கூடிய ஶக்தியிருந்தபோதிலும் இவை ஏன் அற்பமான பலன்களைத் தருவனவாகவுள்ளனவெனில் – சேதநனுடைய க்ஷுத்ரபலருசியின் காரணத்தானலேயாகும். மிக்க செல்வம் வேண்டுபவர்களுக்கு கோபால மந்த்ராதிகள், புத்ரபாக்யம் வேண்டுமென்பவருக்கு ஸ்ரீராமமந்த்ரம், வித்யையை விரும்புமவர்க்கு ஹயக்ரீவ மந்த்ரம், எங்கும் வெற்றிகிட்ட வேண்டுமென்பவர்களுக்கு ஸுதர்ஶந நரஸிம்ஹ மந்த்ரங்கள் என்று இப்படி நியமேந இவை க்ஷுத்ரபலன்களைக் கொடுப்பதற்குக் காரணம், சேதநருடைய ருசிக்கேற்றவாறு இன்ன மந்த்ரங்கள் இன்ன இன்ன பலன்களைக் கொடுக்கக்கடவதென்று ஈஶ்வரன் நியமித்துவைத்துள்ளானு கையாலேயாம். சேதநனுடைய ருசிக்கேற்றவாறு கற்பித்துவைக்கப் பட்டவை ஆதலால் அம்மந்த்ரங்களுக்கு அற்பபலன்களைக் கொடுக்கை இயற்கை யானதன்று. ஈஶ்வரநியமனமாகிற காரணத்தையிட்டு வருவதாகும்.

14. ஶிஷ்யன் என்பது (1) ஸாத்$_4$யாந்த்ர நிவ்ருத்தியும், (2) ப$_2$லஸாத$_4$நஶுஶ்ரூஷையும், (3) ஆர்த்தியும், (4) ஆத$_3$ரமும், (5) அநஸூயையும் உடையவனே.

14. இதுகாறும் ஆசார்யனது ஸ்வருபத்தைச் சொன்னவர், இனி ஶிஷ்யனது ஸ்வருபத்தை விளக்குகிருர். ஆசார்யன் பண்ணக்கூடிய உபதேஶத்தைக் காதாலே கேட்பவன் என்கிற காரணத்தைக்கொண்டு ஶிஷ்யன் என்று ஒருவனைச் சொல்லிவிடமுடியாது. பின் என்னென்ன காரணங்களைக்கொண்டு இவனை ஶிஷ்யன் எனக்குறிப்பிடுவது என்பதுபற்றி ஐந்து காரணங்கள் கூறுகிருர். (1)ஶிஷ்யன் எனப்படுபவன் தனது ஸ்வருபத்துக்கு விரோதியான ஐஶ்வர்யகைவல்யமாகிற வேறுபலன்களில் சிந்தை செலுத்தாதவனுக இருக்கவேண்டும். அல்லது இவ்வாசார்யனைத் தவிர தனக்கு வேருெரு அடையத்தக்க வஸ்துவை அறியாதவனுக இருக்கவேண்டும். (2) ''கு$_3$ரு ஶுஶ்ரூஷயா வித்$_3$யா'' என்கிறபடி ஆசார்யனைத் தான் பண்ணுகிற சுச்ருஷையினுலே மகிழ்ச்சியுறச்

செய்து ஞானத்தைப் பெறுகை முறைமையாகையாலே, ஆசார்யன் தனக்கு உபதேஶிக்கிற தத்த்வஜ்ஞாநமாகிற பலனுக்குக் காரணமாயுள்ள ஆசார்யசுச்ரூஷையாகும். அல்லது ஆசார்யனது முகமலர்ச்சியாகிற பலன் ஸித்திப்பதற்குக் காரணமாயுள்ள குருசுச்ரூஷை. அல்லது தனது ஸ்வரூபத்துக்கேற்ற பலனையும், அதனைப் பெறுவதற்குரிய வழிகளையும், கேட்டறிய விரும்புகையாகும். *(3)***ஆர்த்தியாவது** –''இருள் தருமா ஞாலம்'' என்கிறபடி தனக்குப் பிறக்கவேண்டிய நல்ல ஞானத்துக்கு இடையூறாக விளங்கும் இவ்வுலகைவிட்டுப்போகப் பெறாத துயரமும், அல்லது ஆசார்யனது திருமேனியை ஸேவிக்கப்பெறாத துன்பமும் ஆகும். *(4)* **ஆதரமாவது** – மேலும் மேலும் அநுபவிக்கவேண்டும் என்ற ஆசைபெருகும்படி ஆசார்யன் அருளிச்செய்யும் பகவத்குணாநுபவத்தில் உண்டாகின்ற பெருவிருப்பமாகும். அல்லது பசிமிகுந்தவன் சோற்றைக் கண்டாற்போலே ஆசார்யனை அநுபவிப்பதிலும், அவருக்குத் தொண்டு செய்வதிலும் பெருவிருப்பம் கொள்ளுகையுமாகும். *(5)* **அநஸூயையாவது** – ஆசார்யன் பகவானுடையவும் பாகவதர்களுடையவும் பெருமைகளை விஸ்தரமாக(விரிவாக) அருளிச்செய்யும்போது அதில் பொறாமை கொள்ளாமலிருத்தல். இதுபற்றியே கண்ணனும் கீதையில், ''அர்ஜுநா! நீ அஸூயை இல்லாதவனாக உள்ள காரணத்தினால் உனக்கு இந்த பரமரஹஸ்யமான அர்த்தத்தைச் சொல்லுகிறேன்'' என்றான். அல்லது ஆசார்யனது மேன்மையையும், உடன்பயிலக்கூடிய மாணவர்களது சிறப்பையும் கண்டு பொறாமைகொள்ளாமலிருத்தலுமாகும். பகவானிடத்திலும் பாகவதர்களிடத்திலும் பொறாமை கொள்ளாமலிருத்தல் ஶிஷ்யனுக்குண்டான முக்ய லக்ஷணமாகும்.

---

15. மந்த்ரமும், தே$_3$வதையும், ப$_2$லமும் ப$_2$லாநுப$_3$ந்தி$_4$களும் ப$_{32}$லஸ்த$_2$ாநமும், ஐஹிகபே$_4$ாக$_3$மும் எல்லாம் ஆசார்யனே என்று நினைக்கக்கடவன்.

---

15. ''மந்தாரம் த்ராயதே இதி மந்த்ர:'' (தன்னை நினைப்பவரை எல்லாவிதத்திலும் காப்பாற்றுகிறது என்கிற காரணத்தால் இதற்கு மந்த்ரம் என்று பெயர்) என்கிறபடியே தன்னை அநுஸந்திப்பவர்களை ரக்ஷிப்பதாலே திருமந்த்ரமும், அம்மந்த்ரத்தால் விளக்கப்படும் பரதேவதையும், அவ்வெம்பெருமானது அருளாலே கிடைக்கக்கூடிய கைங்கர்யரூபமான பெரும்பயனும், தனக்குள்ளே இருக்கும் அவித்யை

நீங்கி தனது உண்மை ஸ்வருபம் வெளிப்படுதலும், ஸாலோக்யம் ஸாருப்யம் ஸாமீப்யம் ஸாயுஜ்யம் ஆகிய இவைகளும், இவற்றை யெல்லாம் பெறுவதற்குரிய ஸாதநமும், மனைவி மக்கள் வீடு நிலம் பசுக்கள் அன்னம் முதலியவற்றை அநுபவிப்பதான இவ்வுலக ஸுகம் எல்லாம் ஆசார்யனே என்று எண்ணக்கடவன். ''கு₃ருரேவ பரம்ப்₃ரஹ்ம கு₃ருரேவ பராக₃தி:। கு₃ருரேவ பராவித்₃யா கு₃ருரேவ பராயணம் கு₃ருரேவ பர: காம: கு₃ருரேவ பரம் த₄நம்। யஸ்மாத் தது₃பதே₃ஷ்டாஸௌ தஸ்மாத் கு₃ருதரோ கு₃ரு:॥ என்றும், ''ஐஹிகாமுஷ்மிகம் ஸர்வம் ஸாஷ்டாக்ஷரதோ கு₃ரு:। இத்யேவம் யே ந மந்யந்தே த்யக்தவ்யாஸ் தே மநீஷிபி₄:'' என்று இப்படி ஶாஸ்த்ரங்களும் சொல்லுகையாலே ''எல்லாம் ஆசார்யனே'' என்று நினைக்கக்கடவன் என நியமிக்கிறார்.

---

16. ''மாதாபிதாயுவதய:'' என்கிற ஶ்லோகத்திலே இவ்வர்த்த₂த்தை பரமாசார்யரும் அருளிச்செய்தார்.

---

16. ''எல்லாம் ஆசார்யனே'' என்பதனை ஆளவந்தாரது ஸ்தோத்ரரத்நஶ்லோகத்தின்மூலம் விளக்குகிறார் ''மாதாபிதா யுவதய: தநயா விபூ₄தி: ஸர்வம் யதேவ நியமேந மத₃ந்வயாநாம்'' தாயார் தந்தை மனைவி மக்கள் ஐஶ்வர்யம் முதலிய இம்மைப் பயன்கள் எல்லாம் பரமாசார்யராகிய நம்மாழ்வாரே என்கிறார். ஸர்வம் என்பதனால் மந்த்ரம், தேவதைகள், அவைதரும் பலன்கள் முதலியவற்றையும் குறிப்பிட்டுள்ளார்.

---

17. இதுக்கடி உபகாரஸ்ம்ருதி.

---

17. இப்படி எல்லாமும் ஆசார்யனே என்று எண்ணுவதற்குக் காரணம் நித்ய ஸம்ஸாரியாய்க் கிடந்த தன்னை உபதேஶம் முதலியவற்றால் திருத்தி பரமபதத்தில் நித்யஸூரிகள் போன்று பகவானை அநுபவிப்பதற்குத் தக்கவனாக ஆக்கிய ஆசார்யன் பண்ணிய உபகாரத்தை எண்ணுகையாலே யாகும்.

---

18. உபகாரஸ்ம்ருதிக்கு முதலடி ஆசார்யன் பக்கல் க்ருதஜ்ஞதை; முடிந்த நிலம் ஈஶ்வரன் பக்கல் க்ருதஜ்ஞதை.

---

18. இந்த ஶிஷ்யன் முன்னதாக எண்ணுவது, தனக்கு

அறியாதனவற்றையெல்லாம் அறிவித்து பகவத்விஷயத்தைக் கையிலங்குநெல்லிக்கனியாகக் காட்டிக்கொடுத்த ஆசார்யன் பண்ணின உபகாரத்தையாகையாலே முதலில் நன்றிபாராட்ட வேண்டியது ஆசார்யனையேயாகும். ஆசார்யனிடத்து பெருமதிப்பு நெஞ்சில் படப்பட இத்தகைய ஆசார்யனிடத்தில் தன்னைக் கொண்டுவந்து சேர்த்த ஈஶ்வரன் பண்ணிய உபகாரமே ஶிஷ்யனது நன்றியறிதலுக்கு முடிந்தநிலமாகும். இதனால் பகவத்விஷயத்தை உபதேஶித்த ஆசார்யன்பண்ணின உபகாரத்தை நினைக்க, அவ்வாசார்ய வைபவம் ஊற்றுமாறுமலிருக்கும். அப்போது இத்தகைய ஆசார்யனை நாம் பெற்றது எம்பெருமானாலே அல்லவா என்று எம்பெருமான் செய்த உபகாரத்தை நினைத்து அவனுக்கு நன்றி செலுத்துவதோடு தலைக்கட்டும்.

---

19. ஶிஷ்யனும் ஆசார்யனும் அந்யோந்யம் ப்ரியஹிதங்களை நடத்தக்கடவர்கள்.

---

19. ஶிஷ்யன் ஆசார்யனுக்கு ப்ரியத்தையும் ஹிதத்தையும் அவஶ்யம் செய்யக்கடமைப்பட்டவன். அதேபோன்று ஶிஷ்யனிடத்தில் ஆசார்யனும் ப்ரியமான செயல்களையும் நன்மையான செயல்களையும் அவஶ்யம் நடத்தக்கடவன்.

---

20. ஶிஷ்யன் தான் ப்ரியத்தை நடத்தக்கடவன். ஈஶ்வரனைக் கொண்டு ஹிதத்தை நடத்தக்கடவன். ஆசார்யன் மாறுடி நடத்தக்கடவன்.

---

20. ஶிஷ்யன் ஆசார்யனுக்கு ப்ரியஹிதங்களை நடத்தும் விதமாவது – ஶிஷ்யன் தன் ஸ்வரூபத்துக்கேற்றவாறு ஆசார்யனது முகமலர்ச்சியே புருஷார்த்தமென்று நினைத்து, தான் ஆசார்யனுக்குச் செய்யும் கைங்கர்யங்களாலே எல்லாக்காலத்திலும் ப்ரியத்தை நடத்தக்கடவன். எம்பெருமானுக்கு மங்களாஶாஸநம் பண்ணிக்கொண்டிருப்பவனாகை யாலே இம்மண்ணுலகின் இயல்வாலே திருவுள்ளத்தில் எந்த ஒரு கலக்கமும் வாராதிருக்கவேணுமென்றும், அப்படி ஏதேனும் ஒரு கலக்கம் ஏற்பட்டால், அதனைப் போக்கியருளவேண்டுமென்றும் ப்ரார்த்தித்து ஈஶ்வரனைக் கொண்டுஹிதத்தை நடத்தக்கடவன். ஆசார்யன் ஶிஷ்யனது நன்மையிலே நாட்டம் செலுத்துபவன் ஆகையாலே ஶிஷ்யனது ஸ்வரூபத்துக்கு எந்த விதத்திலும் கேடு வாராதபடி விடவேண்டியவற்

றைக் கைவிடுதலும், ஏற்கத்தக்கவற்றை ஏற்றுக்கொள்ளுதலும் துளியும் நழுவுதல் ஏற்படாதபடி நியமித்து எல்லாக்காலத்திலும் நல்வழிப்படுத்து தலாகிய நன்மையைச் செய்கிறான். கண்ணால் காணப்படும் இவ்வுலக வாழ்க்கையில் ஸங்கோசத்தாலே ஶிஷ்யன் தளர்வுறும் போது, வாழும் நாளில் இவனுக்கு எந்தவிதமான சோர்வும் ஏற்படாதபடி அநுக்ரஹிக்க வேண்டுமென்று ஈஶ்வரனிடம் ப்ரார்த்தித்து ஶிஷ்யனுக்கு ப்ரியத்தை நடத்திக்கொண்டு போரக்கடவன்.

21. ஶிஷ்யன் உகப்பிலே ஊன்றிப்போரும். ஆசார்யன் உஜ்ஜீவநத்திலே ஊன்றிப்போரும்.

21. *ஶிஷ்யன் அடிமை பூண்டிருப்பவனாகையாலே ஶேஷியான ஆசார்யனுடைய ப்ரீதியிலே ஊற்றமுள்ளவனாயிருக்க வேணும்; ஆசார்யன் மிகுந்த கருணையுடையவன் ஆகையாலே தனது ஶிஷ்யனை இவன் ஸம்ஸாரத்தைக் கடந்தவனாய் நல்வாழ்வுபெற வேண்டுமென்ப திலே ஊற்றமுள்ளவனாய் இருக்கவேண்டும். எனவே ஶிஷ்யன் ப்ரியத்தைச் செய்வதும், ஆசார்யன் ஹிதத்தை(நன்மையை)ச் செய்வதுமே முக்யமானதாகும் என்று கருத்து.*

22. ஆகையால் ஶிஷ்யன் ஆசார்யனுடைய ஹர்ஷத்துக்கு இலக்காகையொழிய ரோஷத்துக்கு இலக்காகைக்கு அவகாஶமில்லை.

22. *ஶிஷ்யன் ஆசார்யனுடைய அன்புக்குக்காரணமாகவும், ஆசார்யன் முக்யமாக ஶிஷ்யனுடைய நன்மைக்குக் காரணமாகவும் நடந்து கொண்டிருக்கிறார்கள். அக்காரணத்தினாலேயே ஶிஷ்யனை இவன் ஆசார்யனது அன்புக்குப் பாத்ரமாகிறானேயொழிய இஷ்டமில்லாத வற்றைச் செய்வதனாலே தண்டனைக்கு ஆளாகிறான் என்கிறவிஷயம் அடியோடு இல்லை.*

23. நிக்₃ரஹத்துக்குப் பாத்ரமாம்போது அது ஹிதரூபமாகையாலே இருவர்க்கும் உபாதே₃யம்.

23. *ப்ரக்ருதி ஸம்பந்தத்தோடே வாழ்கிற ஶிஷ்யனுக்கு மனநிலை ஒரேவிதமாக இல்லாமல் கலக்கங்கள் உண்டாகுமன்றோ. அதனால் நிக்ரஹத்துக்குப் பாத்ரமாகும்போது ஆசார்யஶிஷ்யர்கள் நிலை எவ்வாறு இருக்கும் என்பதனை விளக்குகிறார். அதாவது ஶிஷ்யன் செய்யக்கூடாத*

வற்றைச் செய்வதன் காரணமாக ஆசார்யனது ஶிக்ஷைக்கு இலக்காகும் போது அந்தஶிக்ஷை ஶிஷ்யன் தவருன வழியில் சென்றுவிடக்கூடாதே என்று நியமித்து நல்வழிப்படுத்துவதற்குக் காரணமாக இருப்பதனுல் ஹிதருபமாகவே இருக்கும். ஆசார்யன் இப்படி நம்மை தண்டிக்கிருரே என்று ஶிஷ்யன் மனம் வருந்துவதோ, இவனை இப்படி தண்டிக்க நேரிட்டதே என்று ஆசார்யன் மனம் வருந்தவோ செய்யாமல் கண்டிக்கப் பட்ட ஶிஷ்யனுக்கும் தண்டித்த ஆசார்யனுக்கும் அவ்வாறு செய்தது ஏற்றுக்கொள்ளத்தக்கதேயாகும்.

---

24. ஶிஷ்யனுக்கு நிக்$_3$ரஹகாரணம் த்யாஜ்யம்.

---

24. ஆசார்யன் நம்மை தண்டித்தது கொள்ளத்தக்கதேயாகும் என்று எண்ணிக்கொண்டு ஶிஷ்யன் திரும்பவும் தவறு செய்யக் கூடாது. நாம் செய்த தவறு காரணத்தினுலன்றே நீரிலே நெருப்பு உண்டாகுமாப் போலே தன் விஷயத்தில் குளிர்ந்துதெளிந்திருக்கக் கூடிய ஆசார்யன் நெஞ்சிலே நம்மை தண்டிக்க வேண்டுமென்ற எண்ணமெழுந்தது. எனவே மீண்டும் அந்தத் தவறு ஏற்படாத வாறு நாம் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று ஶிஷ்யன் எண்ணவேண்டும்.

---

25. நிக்$_3$ரஹம் தான் ப$_4$க$_3$வந்நிக்$_3$ரஹம் போலே ப்ராப்யாந்தர்க$_3$தம்.

---

25. மேலே சொன்ன ஆசார்ய தண்டனை நமது நன்மைக்காகவே; எனவே அது கொள்ளத்தக்கது என்பதோடன்றி ஶிஷ்யனுக்கு அடையத்தக்க பலனைத் தரக்கூடியதாகவும் இருக்கும் என்கிருர். அதாவது ஆசார்யன், தன்விஷயத்தில் நன்மைசெய்யும் எண்ணத்திலே பண்ணுகிற நிக்ரஹம் (தண்டனை) தனது விரோதிகளிடமிருந்து தன்னை மீட்பதற்காக செய்ததாகும். ஆதலால் இந்த நிக்ரஹம் பகவானது நிக்ரஹம் போலே புருஷார்த்தகோடியிலே சேரும். இதனை ஆழ்வார் ''கொண்டசீற்றம் ஒன்றுண்டு'' ''செய்யேல்தீவினை'' என்று அருளியுள்ளார் (ஆசார்யன், செல்வத்திலோ காமத்திலோ ஆசையற்றவனுதலால், அவை காரணமாக பொறுக்கவும் வெறுக்கவும் சந்தர்ப்பமில்லை; ஶிஷ்யனது நன்மைக்காக வெறுப்புக்கொள்வானேயானுல் அதுவும் கொள்ளத்தக்கதேயாகும் என்று மாணிக்கமாலையிலே ஆச்சான்பிள்ளை கூறியுள்ளார்.)

26. ஆசார்யன் ஶிஷ்யனுடைய ஸ்வரூபத்தை பேணக்கடவன். ஶிஷ்யன் ஆசார்யனுடைய தே₃ஹத்தைப் பேணக்கடவன்.

---

26. எல்லாரையும் நல்வாழ்வுறச்செய்யவேண்டுமென்பதிலே நாட்டம் செலுத்தக்கூடிய ஆசார்யன், உஜ்ஜீவிக்கவேண்டும் என்ற ஆர்த்தியுடன் வந்து அண்டி ஆசார்யனது ப்ரீதியிலேயே ஊன்றியிருக்கக்கூடிய ஶிஷ்யனது ஸ்வரூபத்தை மறந்தும் கூட ஒருகுற்றமும் வாராதபடி ஒருமித்தமனத்தனாய்க் கொண்டு உபதேஶாதிகளைப் பண்ணி அநுக்ரஹிக்கக்கடவன். ஆசார்யனுக்குப் ப்ரியமாக நடப்பதிலேயே நாட்டம்கொண்ட ஶிஷ்யன், தன்னை நல்வாழ்வுறச் செய்வதிலேயே நாட்டம்கொண்டவராய், தன்னுடைய ஸ்வரூபத்தையே ரக்ஷித்துக் கொண்டு போருகிறவராகிய ஆசார்யனுடைய திருமேனியை உரியதொண்டுகள் செய்துகொண்டு எல்லாக்காலத்திலும் ஒருமித்த மனத்தனாய் பேணக்கடவன்.

---

27. இரண்டும் இருவர்க்கும் ஸ்வரூபமாய், ப₄க₃வத்கைங்கர்யமா யிருக்கும்.

---

27. ஆசார்யனானவன் ஶிஷ்யனது ஸ்வரூபத்தைப் பேணுவதும், ஶிஷ்யன் ஆசார்யனது உடம்பைப்பேணுவதும் அவரவர் செய்ய வேண்டிய கடமையாகும். ஆதலால் இரண்டும் இருவர்க்கும் இயல்வான தன்மையாகும். ''அஹமந்நம்'' என்று ஈஶ்வரன் அநுபவிப்பதற்கு யோக்யமான இந்த ஜீவன் நெடுங்காலம் ஈஶ்வரன் தன்னை அநுபவிப்பதற்கு இடம்கொடாமலிருந்தான். அத்தகைய ஶிஷ்யனாகிய ஜீவனை ஈஶ்வரன் அநுபவிக்கத்தக்கபடி ஆக்கித்தந்ததால் ஆசார்யன் பண்ணிய இது பகவத்கைங்கர்யமேயாகும். எம்பெருமானுக்குப் பரமபோக்யமாக உள்ள இந்த ஆசார்யனது ஶரீரத்தை ஶிஷ்யன் பேணிப் பாதுகாப்பதனாலே, அது கண்டு பகவான் பெரிதும் மகிழ்ச்சி கொள்வதனாலே ஶிஷ்யன் பண்ணும் இதுவும் பகவத் கைங்கர்யமேயாகும்.

---

28. ஆசார்யனுக்கு தே₃ஹரக்ஷணம் ஸ்வரூபஹாநி. ஶிஷ்யனுக்கு ஆத்மரக்ஷணம் ஸ்வரூபஹாநி.

---

28. ஆசார்யன் தன்னுடைய தேஹத்தைப் பாதுகாத்துக் கொள்வதில் கண்செலுத்தாமலிருக்க, ஶிஷ்யனானவன் தன்னுடைய

தேஹரக்ஷணத்தைப் பொருட்படுத்தாமல் ஆசார்யனுடைய தேஹரக்ஷணத்திலேயே நாட்டம் செலுத்தவேண்டும். அவ்வாறின்றி ஆசார்யன் தன் தேஹரக்ஷணத்தில் கவனம் செலுத்துவானுனல், அது அவனது ஆசார்யத்வத்துக்குக் கேடாகும். அதேபோன்று ஶிஷ்யன் ஆசார்யன் பக்கல் தன் பாரத்தையெல்லாம் ஒப்படைத்த பிறகு, தன் ஸ்வரூபத்தையெல்லாம் ஆசார்யன் ரக்ஷிக்கக்கடவன் என்று எண்ணியிருக்கவேண்டும். அதைவிட்டு ஶிஷ்யன் தன்னுடைய ஆத்மாவை ரக்ஷித்துக்கொள்ள முற்படுவானுனல் அது ஶிஷ்யனுகிற இவனுடைய ஸ்வரூபத்துக்குக் கேடாகும். எனவே மறந்தும் ஶிஷ்யன் தன் ஸ்வரூபரக்ஷணம் பண்ணக்கூடாது. அதேபோன்று ஆசார்யனும் தன்தேஹரக்ஷணத்தில் நாட்டம் செலுத்தக்கூடாது.

29. ஆசார்யன் ஆத்மரக்ஷணம் பண்ணுமிடத்தில் அஹங்காரம் விரோதி$_4$; ஶிஷ்யன் தே$_3$ஹரக்ஷணம் பண்ணுமிடத்தில் மமகாரம் விரோதி$_4$.

29. ஶிஷ்யனுக்கு நன்மை செய்வதிலேயே நாட்டமுள்ளவனுன ஆசார்யன், தன்னுடைய உபதேஶம் முதலியவற்ருல் ஶிஷ்யனது ஆத்மாவை ரக்ஷிக்குமிடத்தில் ''இவனை நான் ரக்ஷிக்கிறேன்'' என்று எண்ணுவது அஹங்காரமாகும். தன்னுடைய ஆசார்யனுக்கு அடிமைப் பட்டவராக உள்ள இவர், அவ்வாசார்யன் தான் ஶிஷ்யனது ஆத்ம ரக்ஷணம் பண்ணினுர் என்று எண்ணவேண்டுமேயொழிய ''நான் செய்தேன்'' என்ற அஹங்காரம் விரோதியாகும். ஆசார்யனுக்கு ப்ரியத்தைச் செய்யக்கூடிய ஶிஷ்யன், தன்னுடைய பணம் பொருள் முதலியவற்ருல் ஆசார்யனது தேஹரக்ஷணம் பண்ணினேன் என்று எண்ணுவது மமகாரமாகும். தனது உடல் பொருள் ஆவி எல்லாம் ஆசார்யனுடையது என்றிருக்கவேண்டுமேயொழிய தன்னுடையது என்று எண்ணுகிற மமகாரம் விரோதியாகும்.

30. ஆசார்யன் தன்னுடைய தே$_3$ஹரக்ஷணம் தன் வஸ்துவைக் கொண்டு பண்ணக்கடவன். ஶிஷ்யன் ஸ்வதே$_3$ஹரக்ஷணம் ஆசார்யன் வஸ்துவைக் கொண்டு பண்ணக்கடவன்.

30. *''ஶரீரம் அர்த்தம் ப்ராணஞ்ச ஸத்$_3$கு$_3$ருப்போ நிவேத$_3$யேத்''* *(ஶிஷ்யன் தன் உடல் பொருள் ஆவி எல்லாவற்றையும் குருவினிடத்தில்*

ஸமர்ப்பிக்கவேண்டியது.)என்கிறபடி ஶிஷ்யன் தன்னுடையவை எல்லாவற்றையும் ஆசார்யனிடத்தில் முதலிலேயே ஸமர்ப்பித்து விடுகிறானாகையால் ஆசார்யன், தன்னுடைய தேஹரக்ஷணத்துக்காக பொருள்களை ஶிஷ்யனுடையது என்ற எண்ணமில்லாது, தன்னுடைய தாகவே எண்ணிக்கொண்டு வாழ்க்கையை நடத்தக்கடவன். ஶிஷ்யனோ வெனின் தனக்கு என்று செல்வம் ஏதுமில்லாது எல்லாம் ஆசார்யனுடை யது என்றே எண்ணிக் கொண்டு வாழ்க்கை நடத்தவேண்டும்.

---

31. ஆசார்யன் ஶிஷ்யன் வஸ்துவைக் கொள்ளக்கடவனல்லன். ஶிஷ்யன் தன் வஸ்துவைக் கொடுக்கக்கடவனல்லன்.

---

31. ஆசார்யன் தேஹரக்ஷணத்தில் வந்தால் ஶிஷ்யன் எல்லாம் ஆசார்யனுடையது என்றஎண்ணத்தில் கொடுத்தால் வாங்கிக் கொள்ளலாம். அவ்வாறின்றி என்னுடையது என்ற எண்ணத்தில் ஶிஷ்யன் கொடுத்தால் மமகாரதூஷிதமான அந்த வஸ்துவை ஆசார்யன் வாங்கிக்கொள்ளக்கூடாது. ஶிஷ்யன் தன்னுடையது என்று அபிமாநித்திருக்கும் வஸ்து அஹங்காரமமகாரம் மிக்கதாக உள்ளதால் அது விஷமாகும். மென்மையான ஸ்வபாவத்தை உடைய ஆசார்யனுக்கு இவ்விஷத்தை ஸமர்ப்பிக்கக்கூடாது.

---

32. கொள்ளில் மிடியனாம்; கொடுக்கில் கள்ளனாம்.

---

32. ஶிஷ்யன் தன்னுடையது என்று நினைக்கும் செல்வத்தை ஆசார்யன் சபலபுத்தியாலே அச்செல்வத்தை ஏற்றுக்கொண்டானாகில், ஸமஸ்தபாரத்தையும் தாங்கக்கூடியவனாக ஈஶ்வரன் இருக்கும் போது நமக்கு என்ன குறை என்றிருக்கும் பூர்ணனான ஆசார்யன் தரித்ரனாய் விடுவான். "என் உடல் பொருள் ஆவி எல்லாம் ஆசார்யனுக்கே" என்று முன்பே ஸமர்ப்பிக்கப்பட்டதாகையாலே ஆசார்யனுக்குரிய அச்செல்வத் தைத் தன்னுடையது என்று எண்ணி, ஶிஷ்யன் ஆசார்யனுக்கு ஸமர்ப்பித்தானானால் ஆசார்யனுடைய சொத்தைத் தன்னுடையது என்று எண்ணிய தால் ஆசார்யனது சொத்தைத் திருடிய திருடனாவான்.

---

33. கொள்கொடையுண்டானால் ஸம்ப$_3$ந்த$_4$ம் குலையும்.

---

33. ஶிஷ்யன் ஆசார்யன் என்கிற ஸம்பந்தம் உண்டானால் அடிமைப்

பட்டவனுகிய ஶிஷ்யன் 'உடல்பொருள் ஆவி எல்லாமே ஆசார்யனுடையது' என்ற எண்ணத்தோடு ஸமர்ப்பிக்கவேண்டும். அவ்வாறு ஸமர்ப்பித்ததை ஶேஷியான (தலைவனை) ஆசார்யன் ஏற்றுக் கொள்ளுதலும் முறைமையாகும். அவ்வாறின்றி ஶிஷ்யன் தன்னுடையது என்று அபிமாநித்திருக்கும் ஒரு பொருளை ஆசார்யன் ஏற்றுக் கொள்ளுதலும், ஶிஷ்யன் தன்னுடையது என்று எண்ணிக்கொண்டு ஆசார்யனுக்கு ஸமர்ப்பிக்கையும் கூடாது. இத்தகைய முறைகேடான கொள்ளுதலும் கொடுத்தலும் நிகழுமாஞல் ஶிஷ்யன் ஆசார்யன் என்கிற ஸம்பந்தமே சீர் குலைந்துவிடும்.

34. இவன் மிடியனுகையாலே கொடான், அவன் பூர்ணனுகையாலே கொள்ளான்.

34. ஶிஷ்யனை இவன் எல்லாமே ஆசார்யனுடைய சொத்தாகும் என்றும், நம்முடையது என்று ஸமர்ப்பிப்பதற்கு ஒன்றுமில்லை என்றிருக்கும் தரித்ரன் (வறியவன்) ஆகையாலே நாம் ஆசார்யனுக்கு ஒருபொருளைக் கொடுக்கிறோம் என்று எண்ணி கொடுக்கமாட்டான். ஆசார்யனைவன் தன்னுடைய ஸகலபாரங்களையும் ஈஶ்வரன் நிர்வஹிப்பவனுய் நடத்திக்கொண்டு போருவதால் நமக்கினி எந்த விதமான குறையுமில்லை என்று பூர்ணனுயிருக்கிறபடியாலே, ஶிஷ்யன், தன்னுடையது என்று அபிமாநித்துக்கொடுக்கும் எந்தஒருபொருளையும் ஏற்றுக்கொள்ள மாட்டான்.

35. அவனுக்குப் பூர்த்தியாலே ஸ்வரூபம் ஜீவித்தது. இவனுக்கு மிடியாலே ஸ்வரூபம் ஜீவித்தது.

35. ஶிஷ்யன் தன்னுடையது என்று அபிமாநித்த பொருளொன்றையும் ஏற்றுக்கொள்ளாத பூர்த்தியாலே ஆசார்யனுக்கு, ஆசார்யத்வமாகிற ஸ்வரூபம் ஸித்தித்தது. ஶிஷ்யனுக்கு தன்னுடையது என்ற எண்ணத்துடன் ஒன்றையும் ஸமர்ப்பிக்க யோக்யதையில்லை. எல்லாம் ஆசார்யனுடையது என்ற தன்னுடைய வறியநிலையாலே ஶிஷ்யனும் தன்மையாகிற ஸ்வரூபம் ஜீவித்தது.

36. ஆனுல் ஶிஷ்யன் ஆசார்யனுக்குப் பண்ணும் உபகாரம் ஒன்றுமில்லையோ என்னில்

36. இப்படி ஆசார்யனுக்குக் கொடுப்பதற்கு தனக்கு எந்த விதமான யோக்யதையுமில்லை என்றாலும், ஆசார்யன் பண்ணிய உபகாரத்தை யெல்லாம் எண்ணிப்பார்க்கக்கூடிய ஶிஷ்யன், மஹோபகாரகனான ஆசார்யனுக்குப் பண்ணும் உபகாரம் ஒன்றுமில்லையோ என்றால்;

---

37. ஆசார்யன் நினைவாலே உண்டு.

---

37. ஸ்வரூபத்தை அறிந்த ஶிஷ்யன் நினைவாலே, ஒருக்காலும் ஒன்றுமில்லை. இவனைத் திருத்திப்பணிகொள்வதற்கான தன்னுடைய முயற்சி பலித்தது என்பதனால் மகிழ்ந்த ஆசார்யன் நினைவாலே உண்டு.

---

38. அதாவது ஜ்ஞாநவ்யவஸாயப்ரேமஸமாசாரங்கள்.

---

38. கீழே ஆசார்யன் நினைவாலேயுண்டு என்றாரே அதனை விளக்குகிறார். ஶிஷ்யன் தன் ஸ்வரூபம் இன்னதென்று உள்ளபடி அறியக்கூடிய ஞாநமும், அதற்கேற்றதான உபாயத்தில் முழுநம்பிக்கையும், உபேயத்தில் (அடையும் பயனில்) மிகுந்த அன்பும், இவை மூன்றுக்கும் ஏற்றதான நல்ல அநுஷ்டாநமும் ஆகும். இதனால் திருமந்த்ரத்தில் மூன்று பதங்களாலும் விளக்கப்படுகின்ற ஸ்வரூப உபாய புருஷார்த்தங்களில் ஞாநவ்யவஸாய(முயற்சி)ப்ரேமங்களையும் அதற்கேற்ற அநுஷ்டாநங் களையும் சொல்லுகிறது.

---

39. ஆசார்யப்ரீத்யர்த்த$_2$மாக இவனுக்குத்தவிரவேண்டுவது ப$_4$க$_3$வத் த்$_3$ரவ்யத்தை அபஹரிக்கையும், ப$_4$க$_3$வத்$_3$பே$_4$ாஜநத்தை விலக்குகையும், கு$_3$ருமந்த்ரதே$_3$வதா பரிப$_4$வமும்.

---

39. ஆசார்யனுக்கு உகப்பாக ஶிஷ்யன் பண்ணும் கைங்கர்யந்தான் ப்ரவ்ருத்திரூபமாயிருக்கையாலே அவற்றை அருளிச்செய்தபிறகு, ஶிஷ்யன் ஆசார்யனுக்கு ப்ரீதி விளைக்கும் வகையில் எவ்வெவற்றிலிருந்து விலகியிருக்கவேண்டுமென்பதனை அருளிச்செய்கிறார். பகவானுடைய சொத்தை அபஹரிப்பதும், பகவத்போஜநத்தை விலக்குவதும், குருவையும், அவர் உபதேஶித்த மந்த்ரத்தையும், அம்மந்த்ரத்தால் குறிக்கப்படும் தேவதையையும் அவமதிப்பதாகும்.

---

40. ப$_4$க$_3$வத்$_3$த்$_3$ரவ்யாபஹாரமாவது ஸ்வாதந்த்ர்யமும், அந்யஶேஷத்வமும்,

ப$_4$க$_3$வத்$_3$பே$_4$ாஜநத்தை விலக்குகையாவது அவனுடைய ரக்ஷகத்வத்தை விலக்குகை.

40. இவ்வாறு மேலே சொன்னவற்றை விரிவாக விளக்குகிறுர். பகவானது மார்பில் அணிந்திருக்கும் கௌஸ்துபரத்நம் போன்ற **ஆத்மாவாகிற த்ரவ்யத்தைத் திருடுவதாவது** – எம்பெருமானுக்கே உரியதான ஆத்மாவைத் தனக்குரியது என்று எண்ணுவது பகவத்த்ரவ்யாபஹாரமாகும். **அந்யஶேஷத்வமாவது** – பகவானுக்கே அடிமைபூண்டிருக்கும் இந்த ஆத்மாவை மற்றவர்களுக்கு அடிமைப் பட்டதாக நினைக்கையாகும். இதுதான் தாயார் தகப்பனுர் தேவதாந்தரங்கள் வரையிலுமாயிருக்கும். மேலே சொன்ன இரண்டும் ப்ரணவத்தின் முதலெழுத்தான 'அ' என்றதன் நான்காம் வேற்றுமை ''ஆய'' என்பதாலும், நடு அக்ஷரமாகிய ''உ' என்பதாலும் கழிக்கப்படுபவை யாகும். இது ''யோந்யத$_2$ா ஸந்தம் ஆத்மாநம் அந்யத$_2$ா ப்ரதிபத்$_3$யதே; கிம் தேந ந க்ருதம் பாபம் சோரேண ஆத்மாபஹாரிணா'' என்று எல்லாப்பாபங்களுக்கும் காரணமாகச் சொல்லப்படுகிறது. **பகவத் போஜநத்தை விலக்குகையாவது** – பகவானது ரக்ஷணத்தை (காப்பாற்றுதலை) பகவத் போஜநம் என்கிறது. எதனுல் என்றுல் ரக்ஷிக்கப்பட வேண்டிய ஜீவவர்க்கங்களது ரக்ஷணம் பசித்தவனுக்கு உணவு போல அவனுக்கு தாரகமாக (காப்பதற்குரியதாக) இருக்கும். ''மண்ணும் விண்ணும் எல்லாம் உடனுண்ட'' என்ற பாடலுக்கு நம்பிள்ளை அருளிய விளக்கமாவது –''ரக்ஷணம் அவனுக்கு தாரகமாயிருக் கையாலே 'உண்ட' என்கிறது. இல்லையேல் காக்கும் என்ன அமையும்'' என்று. இப்படிப்பட்ட **எம்பெருமானுடைய ரக்ஷகத்வத்தை (பாதுகாக்கும் தன்மையை விலக்குகையாவது** –''அவ–ரக்ஷணே'' என்கிற தாதுவிலே எந்தவிதமான காரணமுமின்றி எல்லாருக்கும் ரக்ஷகனுகச் சொல்லப்படுகிற ஈஶ்வரனுக்கு ரக்ஷிப்பதற்கு இடமின்றி தன்னுடைய முயற்சியாலேயோ பிறராலேயோ தன்னை ரக்ஷித்துக்கொள்ள முற்படுகையாம். இது தான் பகவான் ஒருவனே ரக்ஷகன் என்கிற அர்த்தத்தை வெளிப்படுத்தக்கூடிய நமஸ்ஸாலே கழிக்கப்படுகிற தன்றே.

41. அவனுடைய ரக்ஷகத்வக்ரமம் ப்ரபந்நபரித்ராணத்திலே சொன்னேம்.

கு$_3$ருபரிப$_4$வமாவது – கேட்ட அர்த்த$_2$த்தின்படி அநுஷ்டி$_2$யாதொழிகையும், அநதி$_4$காரிகளுக்கு உபதே$_3$ஶிக்கையும், மந்த்ரபரிப$_4$வமாவது – அர்த்த$_2$த்தில் விஸ்ம்ருதியும், விபரீதார்த்த$_2$ ப்ரதிபத்தியும், தே$_3$வதாபரிப$_4$வமாவது – கரணத்ரயத்தையும் அப்ராப்த விஷயங்களிலே ப்ரவணமாக்குகையும், தத்$_3$விஷயத்தில் ப்ரவணமாக்காதொழிகையும்.

---

41. ஈஶ்வரன் ரக்ஷிக்கும் க்ரமம்தான் என்ன என்பதை மேலே அருளிச் செய்கிறார். ஸர்வரக்ஷகனை அவனுடைய ரக்ஷகத்வ க்ரமத்தை ப்ரபந்ந பரித்ராணம் என்கிற நூலிலே விரிவாகச் சொல்லியுள்ளோம். அங்கே கண்டுகொள்வதென்கிறார். அதிலே அவனையொழிய மற்றுள்ளாரடங் கலும் ரக்ஷகரல்லர் என்கிற விஷயத்தை விளக்கியபிறகு ‘ஈஶ்வரன், தாய் தந்தையர் கைவிட்ட நிலையிலும் ‘‘பின்னும் நின்று அடியேனுக்கு உற்றானாய் வளர்த்து’’ என்கிறபடி தன்னுருவை மறைத்து வேறுருவம் கொண்டு தாய்முகம்காட்டி இன்சொல் சொல்லியும்’ என்று தொடங்கி ‘இவனே எல்லார்க்கும் ரக்ஷகன்’ என்று அவனுடைய ரக்ஷகத்வ க்ரமத்தை தெள்ளத்தெளிவாக அருளியுள்ளார். **குருபரிபவமாவது** – ஶிஷ்யனது உஜ்ஜீவநத்துக்காக அருளிச்செய்யக்கேட்ட, விடத்தக்கவனவாகவும், கொள்ளத்தக்கனவாகவும் உள்ள அர்த்த விஶேஷங்களைத் தகுதியுள்ள வனாயிருந்தபோதிலும் விடத்தக்கனவற்றைவிட்டும், கொள்ளத்தக்கன வற்றை ஏற்றும் அநுஷ்டியாதொழிகையாகும். **அநதிகாரிகளுக்கு உபதேஶிக்கையாவது** – ஶிஷ்யனுக்குத் தஞ்சமாக ஆசார்யன் உபதேஶித்த ஸாரார்த்தங்களை நாஸ்திகர்களாக உள்ள அதிகாரிகளல்லாத வர்களுக்கு பணத்துக்காகவும் புகழுக்காகவும் ஆசைப்பட்டு உபதேஶம் பண்ணுதலாகும். **மந்த்ரபரிபவமாவது** – ஆசார்யன் உபதேஶித்த அந்தந்த மந்த்ரங்களுக்கு உண்மையான அர்த்தங்களை அநுஸந்தித்து நினைவு கூர்கையன்றிக்கே உதாஸீநத்தாலே மறந்துவிடுகை. **விபரீதார்த்த ப்ரதிபத்தியாவது** – ஆசார்யன் அந்தந்த மந்த்ரங்களுக்கு அருளிச்செய்த ரீதியிலேயின்றி விபரீதமான அர்த்தங்களை இதுக்கர்த்தம் இதுதான் என்று எண்ணிக் கொண்டிருக்கையாகும். **தேவதாபரிபவமாவது** – ‘‘விசித்ரா தே$_3$ஹஸம்பத்தி: ஈஶ்வராய நிவேதி$_3$தும்’’ ‘‘மாயவன் தன்னை வணங்கவைத்த கரணமிவை’’ என்று பகவானுக்குத் தொண்டு செய்வதற்கென்றே படைக்கப்பட்டவைகளாய், ‘‘உன் சின்னமும்

திருமூர்த்தியும் சிந்தித்துஏத்தி கைதொழவே'' என்று அவனை நினைப்பதற்கும் துதிப்பதற்கும் வணங்குவதற்கும் உறுப்பான மனம்மொழி மெய்களை ஸ்வருபத்துக்கு சேராத அருவருக்கத்தக்க விஷயங்களிலே மேட்டிலே உள்ள நீர் பள்ளத்திலே விழுமாப்போலே பண்ணுவதாகும். **தத்விஷயத்தில் ப்ரவணமாக்காதொழிகையாவது** – ''மால்கொண்ட சிந்தையராய்'' ''நாத்தழும்பெழ நாரணா என்றழைத்து மெய்தழும்பத் தொழுதேத்தி'' முதலான பாசுரங்களில் சொன்னபடி தன் ஸ்வருபத்துக்கேற்ற எம்பெருமான் விஷயத்தில் பேரார்வம் கொள்ளாதிருத்தல். ''மந்த்ரே தத்$_3$தே$_3$வதாயாம் ச தத$_2$ாமந்த்ரப்ரதே$_3$ கு$_3$ரௌ – த்ரிஷு ப$_4$க்தி: ஸதா$_3$ாகார்யா'' என்றும், ''மந்த்ரநாதம் கு$_3$ரும் மந்த்ரம் ஸமத்வேந அநுப$_3$ாவயேத்'' என்றும் பூஜிக்கத்தக்க இம்மூன்று விஷயங்களையும் அவமதிப்பதாகும். இவ்வாறு ஆசார்யனுக்கு ப்ரீதி விளைவிக்கும் வகையில் செய்யவேண்டியவற்றையும் தவிர்க்கவேண்டியவற்றையும் அருளிச் செய்தார். இனி இந்த ஶிஷ்யனுக்கு இருக்கவேண்டியதொன்றைச் சொல்கிறார்.

---

42. இவனுக்கு ஶரீராவஸாநத்தளவும் ஆசார்யவிஷயத்தில் ''என்னைத் தீமனங்கெடுத்தாய்'' ''மருவித்தொழும் மனமே தந்தாய்'' என்று உபகாரஸ்ம்ருதி நடக்கவேணும்.

---

42. இம்மண்ணுலகில் இவ்வுடம்போடு இருக்கும்வரையில் இந்த ஶிஷ்யன், பெரியஉபகாரம் பண்ணிய ஆசார்யனிடத்தில், ''என்னுடைய கெட்ட மநஸ்ஸைப் போக்கினீர்'' ''எந்தவிதமான ப்ரயோஜநத்தையும் எதிர்பாராமல் பகவானுக்கு அநுகூலமான கார்யங்களைச் செய்யும் மனத்தைத் தந்தீர்'' என்று நன்றிமிக்கவனாய் ஆசார்யன் வழியிலே செல்லவேண்டும்.

---

43. மநஸ்ஸுக்குத் தீமையாவது – ஸ்வகு$_3$ணத்தையும் ப$_4$க$_3$வத் ப$_4$ாக$_3$வத தே$_3$ாஷத்தையும் நினைக்கை.

---

43. ***மநத்திற்குத் தீமையாவது*** – சமம் தமம் முதலிய ஆத்ம குணங்கள் தனக்குண்டானாலும், 'நீசனேன் நிறைவொன்றுமிலேன்' ''நலந்தானொன்றுமிலேன்'' என்கிறபடியே தனக்கோராத்மகுணமில்லை என்று ஶிஷ்யன் தன் சூந்யதையை எண்ணவேண்டியதிருக்க, இக்குணங்கள் எல்லாம் எனக்கு

இப்போது உண்டு என்று தனக்குண்டான நற்குணங்களை மிகுதியாக நினைத்தல் தீமையாகும். **பகவானது தோஷத்தை நினைக்கையாவது –** தனக்கு அடிமைப்பட்டவனை இந்த ஆத்மவஸ்துவை பகவான் தன்னுடைய உபேக்ஷயினாலே (வெறுப்பினாலே)நீண்டகாலமாக கர்மத்தை வ்யாஜமாக்கி கைவிட்டுவிட்டான் என்றும், அத்துடன் நில்லாது ஈவிரக்கமற்றவரைப்போலே அவனவனது கர்மத்திற்கேற்றவாறு பலனைத்தருவதாகச் சொல்லிக்கொண்டு நரகங்களிலே தண்டித்துத் தீர்ப்பவனாவான் என்றும், அப்படி அவன் ஏற்றுக்கொண்டாலும் தங்குதடையற்ற ஸ்வாதந்த்ர்யம் உள்ளவனாதலால் இன்னபோது இன்னபடி செய்வான் என்று நம்பமுடியாதவன் என்றும், க்ருஷ்ணாவதாரத்தில் தர்மத்தை நிலைநிறுத்துவதற்காகப் பிறந்தவன் என்று சொல்லிக் கொண்டு கண்ட பெண்களோடு இஷ்டப்படி கூத்தடித்தான் என்றும், ஸமஸ்த கல்யாணகுணங்களோடுகூடிய எம்பெருமானிடத்தில் எந்தவிதமான தோஷமுமில்லாதபோது இப்படியெல்லாம் தோஷத்தை நினைக்கையாகும். **பாகவத தோஷத்தை நினைக்கையாவது –** குட்டையாக இருக்கிறான், கோணலாக இருக்கிறான், கருப்பாக இருக்கிறான் என்றெல்லாம் அவர்களது திருமேனியைப்பற்றிக் குறையாக நினைப்பதும். அஹங்காரம் மிக்கவர் என்றெல்லாம் நினைப்பதாகும்.

---

44. தே$_3$ாஷம் நினையாதொழிகிறது – கு$_3$ணம்போலே உண்டாயிருக்கவன்று; இல்லாமையாலே.

---

44. பகவத்பாகவத விஷயங்களில் தோஷத்தை நினையாதொழிகிறது தனக்கு குணங்கள் இருந்தபோதிலும் அவற்றை நினையாதிருப்பது போலே, குறைகள் இருக்கச்செய்தே அவற்றை நினைக்காமல் இருப்ப தொன்று. பகவானிடத்திலும் அடியார்களிடத்திலும் தோஷங்களே கிடையாது. எப்படியென்றால் ஸர்வமுக்தி ப்ரஸங்கம் வாராமைக்காக தானிட்ட கட்டளையை நிறைவேற்றுவதற்காக உலகத்தில் ஸகல ஜீவாத்மாக்களையும் படைக்கிறான். பின்னர் எல்லா ஆத்மாக்களினுடைய நல்வாழ்வுக்காக 'எதிர் சூழல்புக்கு' என்கிறபடி அவதாராதிகளைப் பண்ணி நாட்டாரைத் திருத்தமுற்படுகிறான். எனவே நீண்டகாலமாக விரும்பாதவனாக இருந்தான் என்று சொல்லமுடியாது. ஈவிரக்கமின்றி எல்லாரையும் அவரவர்களது கர்மங்களுக்கேற்றபடி தண்டிக்கிறானே என்றால் அதற்கும்

காரணமுண்டு. மண்ணைத் தின்னக்கூடிய குழந்தையை மண்தின்னமல் தடுப்பதற்காக தாயார் அதன் நாக்கிலே குறியிட்டு அச்சுறுத்துமாபோலே ஜீவனுடைய நன்மைக்காகக் செய்வதனலே, அச்செயல் ஜீவனது நல்வாழ்வுக்கே உறுப்பானதாகும். கேட்பாரற்ற ஸ்வாதந்த்ர்யம் உள்ளவனயிருத்தலால் அதுவே ஸம்ஸாரிகளைக்கட்டுக்குள் கொண்டு வருவதாயிருந்தபோதிலும், க்ருபைக்குவஶப்பட்டவனய் ஜீவனை ஏற்றுக்கொண்டபிறகு நித்யஸம்ஸாரியாக உள்ள இவனை நித்யஸூரிக ளுக்கு ஸமமாக ஆக்குகிருனே. எனவே அது கொண்டாடத்தக்கதே யாகும். க்ருஷ்ணுவதாரத்தில் கண்டபடி பெண்களோடு விளையாடினு னென்ருல், உத்தரையின் கர்ப்பம் கரிக்கட்டையாய்ப்போன காலத்தில் அந்த கர்ப்பத்தைக் காப்பாற்றுவதற்காக ‘‘நான் நித்யப்ரஹ்மசாரியாக இருப்பது உண்மையானல் இக்குழந்தை பிழைக்கட்டும்’ என்று ஶபதமிட்டு அக்குழந்தையைப் பிழைக்கவைத்தாரே அதிலிருந்து ஶரீரஸம்பந்தமில்லை என்று தெரிந்துகொள்ளலாமன்ருே. ‘‘கோப்ய: காமாத்’’ (கோபிர்கள் காமத்தினல்) என்கிறபடி அந்த வழியாலே அவர்களைத் தன் பக்கல் ஈடுபடச்செய்து அவர்களை நல்வாழ்வுறச் செய்ததனலே அது குணமேயொழிய தோஷமாகாது. இனி பாகவதர்களும் ‘‘குற்றமின்றி குணம்பெருக்கி’’ என்று குற்றமற்றவர்களாய் கணக்கற்ற குணங்கள் உள்ளவர்களாயிருக்கையாலே உள்ளூற ஆராய்ந்து பார்த்தால் அவர்கள் பக்கலும் தோஷமேதுமில்லை. எனவே பகவத்பாகவத விஷயங்கள் தோஷமேதும் கிடையாது என்பது தேறிற்று.

---

45. தே₃ாஷமுண்டென்று நினைக்கிறது பரதே₃ாஷமன்று ஸ்வதே₃ாஷம்.

---

45. மேலே சொன்னபடியில்லாமல் பகவத்பாகவதவிஷயங்களில் இவன் தோஷம் உண்டென்று நினைத்தானனல் அவர்களிடத்தில் இவனுக்குத் தோற்றுகிற தோஷம் அவர்கள் தோஷமன்று. தோஷத்தைப் பார்க்கும் இவனுடைய தோஷமேயாகும்.

---

46. ஸ்வதே₃ாஷமானபடி என்னென்னில்.

---

46. பிறருடையதாய்த் தோற்றுகிற அக்குற்றம் தன்னுடைய தோஷமாக எப்படியாகுமென்னில்,

---

47. ஸ்வதே₃ாஷத்தாலும், ப₃ந்த₄த்தாலும்

47. கண்ணிலே தோஷமுள்ளவன் பார்வைக்கு சந்த்ரன் இரண்டாகத் தோற்றுமாப்போலே குற்றமற்ற விஷயங்களில் தோஷம் தோன்றும் படியாக உள்ள கெட்டவாஸனை உள்ளது துஷ்ட சித்தத்தைக் கொண்டிருக்கிற தன் தோஷமேயாகும். பிள்ளைகள் தோஷம் தகப்பனார்களுடைய தோஷமாமாப்போலே அவர்களுடைய தோஷம் தன்னதாம் படி அவர்களோடு தனக்குண்டான ஸம்பந்த விஶேஷத்தாலுமாகும்.

48. ஸ்வதோ₃ஷமில்லையாகில் கு₃ணப்ரதிபத்திநடக்கும்.

48. சந்த்ரன் இரண்டாகத் தோன்றுகிற கண் கோளாறு இல்லாத போது சந்த்ரன் ஒருவனாகவே தோற்றுமாப்போலே, பிறரது தோஷத்தைப் பார்ப்பதற்குக் காரணமான தன்மனத்தில் தோஷமில்லாதபோது குணங்கள் தான் தோன்றும்.

49. நடந்ததில்லையாகில் தோ₃ஷஜ்ஞாநமே தோ₃ஷமாம்.

49. குணமுள்ளது என்ற எண்ணம் தோன்றாமல் போனால் தோஷமுள்ளது என்ற எண்ணம் தான் தோன்றும். அந்த தோஷ ஜ்ஞாநமே பகவான் இவனை தண்டிப்பதற்குக் காரணமான தோஷமாகும். எனவே இதன் மூலமாக வேறொருதோஷமுண்டென்று எண்ணவேண்டாம். ஆதலால் இது அவஶ்யம் விலக்கக்தக்கதாகும்.

50. இது தனக்கவஸரமில்லை.

50. அதாவது பகவானுடையவும் பாகவதர்களுடையவும் தோஷத்தைச் சிந்திப்பதற்கு இவனுக்கு அடிப்படையிலே அவகாஶமில்லை.

51. ஸ்வதோ₃ஷத்துக்கும் ப₄க₃வத்பா₄க₃வதகு₃ணங்களுக்குமே காலம் போருகையாலே.

51. பகவத்பாகவத தோஷத்தைச் சிந்திப்பதற்கே அவகாஶமில்லை என்பதற்கான காரணத்தை விளக்குகிறார். ''நீசனேன் நிறைவொன்றுமிலேன்'' ''பொய்ந்நின்ற ஞானமும் பொல்லா வொழுக்கும் அழுக்குடம்பும்'' ''அமர்யாத: க்ஷுத்ர:'' ''வித்வேஷ மாந மதராக விலோபமோஹாத் அஜ்ஞாந பூமி:'' ''அதிக்ராமந் ஆஜ்ஞாம் தவ விதிநிஷேதேஷு பவதேபி அபி த்ருஹ்யந் வாக்தீக்ருதிபி ரபி பக்தாய ஸததம் அஜாநந் ஜாநந்வா பவதஸஹநீயாகஸி ரத:'' ''ஸ்ரீரங்கேஶ த்வத் குணநாமிவாஸ்மத்

தோஷாணும் க: பாரத்ருச்வாய தோஹம்'' என்கிறபடி கணக்கற்ற தன்னுடைய தோஷங்களை எண்ணுவதால் பிறர் தோஷங்களைப் பார்க்க அவகாமமில்லை. மேலும் இத்தகைய தன்னுடைய தோஷங்களை யெல்லாம் ஏறெடுத்தும் பாராமல் தன்னை ஏற்றுக்கொள்ளக்கூடிய பகவானது குணங்களையும். ''வேதம் வல்லார்களைக் கொண்டு'' என்றும் ''போதயந்த:பரஸ்பரம்'' என்றும் ''சிறுமாமனிசராய் என்னையாண்டார் இங்கேதிரிய'' நறுமாவிரைமாள்மலரடிக்கீழ்ப் புகுதலுறுமோ'' என்றும் சொல்லுகிறபடி பகவானையும் தன்னையும் சேர்த்து வைக்கும் புருஷகார பூதர்களாயும், உற்ற துணையானவர்களாயுமுள்ள பாகவதர்களை நினைவதாலும் பிறர்தோஷங்களைப் பார்க்க அவகாமமில்லை. ''அஸங்க்யேய கல்யாண குணகணைக மஹார்ணவ'' ''யதா ரத்நாநி ஜலதே:'' அஸங்க்யேயா நிபுத்ரக। ததா குணுஹ்யநந்தஸ்ய அஸங்க்யேயா மஹாத்மந:।। ''நாஹம் ஸமர்த்தோ பகவத்ப்ரியாணும் வக்தும் குணுந் பத்மபுவோப் யகம்யாந்'' என்றும் சொல்லுகிறபடியே கணக்கற்ற பகவானது குணங்களை எண்ணிப்பார்ப்பதிலேயே காலம் கழிகிறபடியால் தோஷங்களைப் பார்க்க அவகாமமில்லை என்றபடி. இவற்றை எண்ணவே அவகாமமில்லை என்பதால் தன்னுடைய குணங்களை நினைவதற்கும் அவகாமமில்லை என்பது தன்னடையே கிட்டும்.

---

52. ஸம்ஸாரிகள் தே₃ாஷம் ஸ்வதே₃ாஷமென்று நினைக்கக்கடவன்.

---

52. இவ்வுலகிலுள்ள ஸம்ஸாரிகள் பகவானை ஏறெடுத்தும் பாராமலிருத்தல், ஆத்மாவல்லாத மரீரத்தை ஆத்மாவாக எண்ணுதல், தன்னுடையதல்லாத சொத்தை தன்னுடையது என்று எண்ணுதல் முதலிய அவர்களது தோஷங்களைக் கண்டால் அக்குற்றங்களைக் கண்டு அவர்களை இகழக்கூடாது. இவர்களுக்கும் நமக்கும் என்ன ஸம்பந்தம்? என்று எண்ணியிருக்கக்கூடாது. அவர்களது தோஷங்களைத் தன்னுடையதாக எண்ணவேண்டும்.

---

53. அதுக்கு ஹேது ப₃ந்த₄ஜ்ஞாநம்.

---

53. தனக்குத்தலைவர்களான பகவத்பக்தர்களது தோஷத்தைத் தன்னுடைய தோஷமாக எண்ணுவதற்குக்காரணம் அவர்களோடு

தனக்குண்டான ஸம்பந்தஜ்ஞாநமாகும். நாராயணத்வப்ரயுக்த ஸம்பந்த ஜ்ஞாநம். அதாவது எல்லார்க்கும் ஈச்வரனோடு ஸம்பந்தம் ஒத்திருக்கையாலே, அது காரணமாகவே அவர்களுக்கும் தனக்கும் ஸம்பந்தம் உண்டு. தனக்குத் தவிர்க்க முடியாத தேஹஸம்பந்தமுள்ள பந்துக்களுக்கு வந்த தோஷம் தனக்கு வந்ததாக நினைத்திருக்குமாப்போலே ஸம்ஸாரிகளுக்குண்டான தோஷத்தைத் தன்னுடைய தோஷமாக நினைப்பதில் குறையில்லை.

---

54. ''இறைப்பொழுதுமெண்ணோம்'' என்கையாலே அது தோன்றுது.

---

54. ஸம்ஸாரிகளுடைய தோஷத்தைத் தன் குற்றமாக இவன் நினைப்பது அவர்களுடைய தோஷம் இவனுக்குத் தோன்றிலல்லவா ஏற்படப் போகிறது, அது தான் முதலிலே இவனுக்குத் தோற்றுது என்கிறார் ''கடல்மல்லைத் தலசயனத்துறைவாரை எண்ணாதே இருப்பாரை இறைப்பொழுதும் எண்ணோமே'' என்றார் திருமங்கையாழ்வார். பரமபதத்திலே நித்யஸூரிகள் மிகுந்த பரிவோடு தொண்டுசெய்ய வீற்றிருக்கும் எம்பெருமான் திருக்கடல்மல்லையிலே வந்து ஸம்ஸாரிகளைப் பெறுவதற்காகத் தரைக்கிடைக் கிடக்கிறானே என்ற ஸௌலப்யத்தை (நீர்மையை) எண்ணி, 'இப்படி ஒரு ஸௌலப்யம் இருக்கும்படிதான் என்னே'' என்று அக்குணத்துக்குத் தோற்று இடையறாது எண்ணி எண்ணி உருகவேண்டியிருக்க, அவனை ஏறெடுத்தும் பாராமல் கேவலம் தன்னுடலைப் பேணுவதிலே ஈடுபட்டிருக்கும் ஸம்ஸாரிகளைக் கணப்போதும் நினைக்கமாட்டோம் என்கையாலே ஸம்ஸாரிகள் தோஷம் இவர்கள் கண்ணுக்குத்தோற்றுது. திருமங்கையாழ்வார் அருளிச்செய்த இது எல்லார்க்கும் பொருந்தும்.

---

55. தோன்றுவது நிவர்த்தநார்த்தமாக.

---

55. ''சொன்னால் விரோதமிது'' ''ஒருநாயகமாய்'' ''கொண்டபெண்டிர்'' முதலிய திருவாய்மொழிகளிலே நம்மாழ்வாருக்கும் கூட ஸம்ஸாரிகள் குற்றம் தோற்றிற்றிறே என்ற வினவுக்கு விடையளிக்கிறார். அதாவது ஸம்ஸாரிகள் பக்கல் தோஷம் தோன்றுவது அத்தோஷங்களினின்றும் அவர்களை விடுவிப்பதற்காக. பணிவிடை செய்யத்தகாதவர்களுக்குத் தொண்டுசெய்து கொண்டிருக்கும் ஸம்ஸாரிகளைத் திருத்தி மீட்கவே

ஆழ்வார் அவ்வாறு அருளிச்செய்தார்.

56. பிராட்டி ராக்ஷஸிகள் குற்றம் பெருமாளுக்கும், திருவடிக்கும் அறிவியாதாப்போலே, தனக்கு பிறர்செய்த குற்றங்களை ப$_4$க$_3$வத்ப$_4$ாக$_3$வத விஷயங்களில் அறிவிக்கக்கடவனல்லன்.

56. லங்கையில் அஶோகவநத்தில் ஸீதையை ஒற்றைக்கண்ணி, ஒற்றைக்காதி முதலான எழுநூறு ராக்ஷஸிகள் ஒருநாள்போல பத்துமாஸமும் உருட்டல், மிரட்டல் பண்ணிக்கொண்டிருந்த போதிலும் பிராட்டி அவர்கள் செய்த குற்றத்தை பகவானுன பெருமாளுக்கும் (ஸ்ரீராமருக்கும்) பக்தரான அநுமாருக்கும் அறிவியாதாப்போலே தனக்குப் பிறர்செய்த குற்றங்களை பகவானிடத்திலோ பாகவதர்களிடத்திலோ மறந்தும் சொல்லக் கூடாது.

57. அறிவிக்க உரியவனகப்பட வாய்திறவாதே ஸர்வஜ்ஞ விஷயங்களுக்கும் மறைக்குமென்னு நின்றதிறே.

57. பிராட்டியின் தன்மையைச் சொன்னவர் இனி பெருமாளின் தன்மையைச் சொல்லுகிருர். பகவான் தன்னுடைய எளிமை, நீர்மை முதலிய குணங்களை வெளிப்படுத்தி மண்ணுலகிலுள்ள மாந்தர்களைத் தப்பாமல் அகப்படுத்திக் கொள்வதற்காக மண்ணுலகில் வந்து அவதரித்தார். தனக்கு அடியார்கள் வேண்டுமென்றுவிரும்பினுல் அவர்கள் அப்படி அநுகூலராய் தோன்ருது இருந்தாலும் இச்சேதநர்கள் என்ன செய்தாலும் செய்துபோகட்டும்; இவர்கள் நம்முடைய உடலில் உள்ள உறுப்புக்கள்தானே என்று எம்பெருமான் அதனையே இன்பமாகக் கொண்டிருப்பர். அதற்கும்மேல் அவர்கள் தன்னை ஏறெடுத்தும் பாராமல் அலட்சியமாக இருக்கிருர்களே என்று அவர்கள் குற்றத்தைக் தனித்திருக்கும்போதும் பிராட்டிக்கும் தெரிவிக்கமாட்டார். இதனை ஆழ்வார் – ''சூழ்ந்தடியார்'' என்ற பாட்டில் சேதநர் செய்த குற்றங்களை தன் திருவுள்ளத்துக்கு உகந்தவர்களிடம் கூட எம்பெருமான் வாய் திறந்து சொல்லமாட்டான்; தான் சொல்லாதுபோனுலும் அறியக்கூடிய எல்லாமறிந்தவளாகிய பிராட்டிக்கும் சொல்லாமல் மறைப்பான் என்ருர். இவ்வாறு இப்படி எம்பெருமானுட்பட சேதநர்கள் குற்றத்தை மறைக்கிருன் என்ருல் மற்றவர்கள்பற்றி சொல்லவும் வேண்டுமோ.

58. குற்றம் செய்தவர்கள் பக்கல் பொறையும் க்ருபையும் சிரிப்பும் உகப்பும் உபகாரஸ்ம்ருதியும் நடக்கவேணும்.

58. குற்றம் செய்தவர்களிடத்து நடந்துகொள்ளவேண்டிய முறைமைகளை விவரிக்கிறார். குற்றம் செய்தவர்களிடத்தில் **பொறையாவது** – அவர்கள் செய்த குற்றத்துக்காக பதிலுக்கு தீங்கிழைக்காமலிருத்தல், மனத்தில் கருவாமல் இருத்தல் ஆகிய குற்றங்களைப் பொறுக்கும் பொறுமையாகும். **க்ருபையாவது** – நாம் இவன் செய்த குற்றத்தை பொறுத்தோமாகிலும், எம்பெருமான் இவனுக்குத் தக்கதண்டனை தரப்போகிறானே ஐயோ! இதற்கு நாம் என்ன செய்வோம் என்று எண்ணி பிறர் துயரம் கண்டு பொறாமலிருத்தல். **சிரிப்பாவது** – கண்ணாலே காணாத மேலுலகை நாம் அடைவதற்கு இவர்களால் விரோதம் காரணமாகச் செய்யக்கூடியது ஒன்றுமில்லையாகிலும், கண்ணாலே காணும் வகையில் க்யாதி லாபங்களுக்காக (புகழுக்காகவும், பணத்துக்காகவும்) பருஷமாகப் பேசுவது முதலிய தீய செயல்களை இவர்கள் செய்யக்கூடும். அப்படிச் செய்தார்களானால் தங்களைப் போலே நாமும் சபலபுத்தியில்லாதவர்களாய் இவற்றினுடைய ஹாநியினால் மனம் வருந்தி தளர்வோம் என்று நினைக்கிறார்களே! இவர்களது அறிவின்மைதான் என்னே! என்று எண்ணிச் சிரித்திருத்தல் ஆகும். **உகப்பாவது** – அவர்கள் பண்ணும் அவமாநம் முதலியவற்றுக்கு விஷயமான தன் ஶரீரத்தைத் தனக்கு சத்ருவாகவும், அவர்கள் கேடுவிளைவிக்கும் கண்ணாலே காணத்தக்க பதார்த்தங்களைத் தனக்குப்ரதிகூலங்களாக எண்ணியிருக்கிற காரணத்தினாலே தன்னுடைய எதிரியைக் குறித்து ஒருவன் அவமாநம் முதலியவற்றை செய்தல், தனக்கு ப்ரதிகூலமான பாபங்களையெல்லாம் போக்குதல் ஆகிய செயல்களை செய்தால் மகிழ்வது போலே ஒருவன் அவர்களிடத்தில் அன்பு செலுத்துதல் ஆகும். **உபகாரஸ்ம்ருதியாவது** – நம்முடைய தோஷங்களை நாம் மறந்திருக்கும் காலத்தில் அவற்றை நினைவுபடுத்தியும், நமக்கு இந்த உலக வாழ்க்கையில் ஆசையில்லாதபடி துன்பத்தைச் செய்தும், இப்படி எல்லாம் நமக்கு இவன் பண்ணும் உபகாரம் என்று நன்றி பாராட்டுவதாகும். இவ்விடத்தில் வழங்கும் வரலாறாவது – பராஶரபட்டர் ஒருநாள் நம்பெருமாள் புறப்பாட்டுக்கு முன்னர் எம்பெருமானை ஸேவித்துவிட்டு வெளியேவரும்போது ஒரு வேத்ரபாணி பட்டரை பலவாறு பழித்துப்பேசினான். சற்று நேரத்தில் பட்டர் அவனுக்கு உயர்ந்த

சால்வையையும் மோதிரத்தையும் அளித்தாராம். ஶிஷ்யர்கள் இவ்வாறு வைதவனுக்கு இதுசெய்தது ஏன் என்று கேட்டதற்கு நான் மறந்திருந்த என் குற்றங்களையெல்லாம் பாபமே பச்சையாக ரக்ஷிக்கும் எம்பெருமானிடம் தெரிவித்தானே அந்தநன்றி அறிதலுக்காகக் கொடுத்தேன் என்றாராம். ஆக நமக்குத் தீங்கிழைத்தவர்களிடம் நாம் நன்றியறிதலுடன் நடக்கவேண்டும் என்பது தேறிற்று.

பிள்ளைலோகாசார்யர் திருவடிகளே சரணம்
ஜீயர் திருவடிகளே சரணம்